
942.1



த் தமிழ்ச் சங்கம்
57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6

# வ இலங்கை

# நவ இலங்கை

நூலாசிரியர் :

எச். ஏ. ஜே. ஹுலுகல்லே

குல. சபாநாதன்


2848

இலங்கை அரசினர் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது,

கொழும்பு.

1951.

[illegible]—2,507 (8/50)




கண்டி

டொனமூர் அரசியல் திட்டப்படி வயதுவந்தவர்கட்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டதிலிருந்து "இந்தியர் பிரச்னை" இலங்கை அரசியற்றுறையில் ஏற்பட்டது. இத்தீவின் முன்னேற்றத்தில் நிரந்தரமான கரிசனையில்லாதவர்களும், இந்தியாவையே தமது நிரந்தரத் தாயகமாக நினைத்து, அடிக்கடி வந்து போகின்றவர்களும் ஆகிய இந்தியத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படவேண்டுமா என்பதுதான் பிரச்னை. அக்காலத்தில் இருந்த இலங்கைத் தேசாதிபதி குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பிய அறிக்கை யொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :—

"இந்திய மக்களுடனும் இந்திய அரசாங்கத்துடனும் எதிர்காலத்தில் நல்லெண்ணைத் தொடர்பினை ஏற்படுத்தும் பொருட்டு இப்பிரச்னை மிகவும் சிக்கலாக வருமுன்னர் அதனை நன்கு அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது மிகவும் அத்தியாவசியம் என எனக்குத் தோற்றுகிறது".

இந்தியாவிலிருந்து குடியேறியவர்களை வாக்காளர்களாகப் பதிவுசெய்த விஷயத்தில், இந்நாட்டில் நிரந்தரமாகக் குடியிருப்பதையும் நிரந்தரமான கரிசனை கொண்டிருப்பதையும் அத்தாட்சிப்படுத்துவதற்கு இராஜசபைச் சட்டத்தின்படியுள்ள நிபந்தனைகள் கண்டிப்பாகக் கவனிக்கப்படவில்லையெனவும், தகுதியற்ற அநேகரின் பெயர்கள் பதிவு டாப்பில் சேர்க்கப்பட்டுள்ளன எனவும் இலங்கை அரசியல் வாதிகள் குறை கூறுகின்றனர். இது ஒருபுறமிருக்க, கல்வி யறிவில்லாத இந்தியத் தொழிலாளர்கள் தங்கள் பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிந்துகொள்வதில் பட்ட கஷ்டங்களைப்பற்றி இந்தியர் வற்புறுத்தினர். **1946** ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரஸ் ஆறு ஸ்தானங்களைக் கைப்பற்றியது. தோட்டப் பகுதிகள் உள்ள டிஸ்திரிக்குகளில் குறைந்த பட்சம் முன்னர்க் கூறிய தொகையளவு ஸ்தானங்களின் தெரிவு இந்தியரின் வாக்குரிமையால் பாதிக்கப்பட்டதென்பதிற் சந்தேகமில்லை.

இலங்கையிலுள்ள இந்தியர்களின் அந்தஸ்து சம்பந்தமான விசேஷ சட்டம் உட்பட பிரஜா உரிமை, குடியேற்றம் சம்பந்தமான சட்டமும் அண்மையில் ஆக்கப்பட்டுள்ளன.



களனி ரஜமஹாவிஹாரை என்னும் பௌத்த ஆலயம்.



# பல நூற்றாண்டுகளாக

இலங்கையைப்பற்றிப் பண்டைக்காலத்தில் எழுதிய நூலாசிரியர்கள் அதன் அளவைப் புனைந்துரைத்துவிட்டனர். கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் எகிப்தில் வாழ்ந்தவரும், இலங்கைத் தேசப்படத்தை முதன் முதலாகப் பிரசுரித்தவருமாகிய தலமி எனும் கிரேக்க வானசாஸ்திரி இலங்கையின் அளவைச் சுமத்திரா அல்லது மடகஸ்காரின் விஸ்தீரணத்துக்குச் சமமாகக் காட்டியுள்ளார். கி. பி. 1292 ல், மார்கோ போலோ என்பவர் இத்தீவின் சுற்றளவு 2,400 மைல் எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்களுக்கு முற்பட்ட காலத்து நூலாசிரியர்கள் இலங்கையின் மேற்குக் கரை ஆபிரிக்காவரை பரந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் கூடிய நீளம் வடக்குத் தெற்காய் 271 மைல்; அதன் கூடிய அகலம் கிழக்கு மேற்காய் 140 மைல்; இதன் பரப்பு 25,332 சதுர மைல். இலங்கையின் பரப்பு ஒல்லாந்தும் பெல்ஜியமும் சேர்ந்த பரப்பளவுக்குச் சமம் எனலாம். அன்றேல் உவேல்ஸ் புறநீங்கலாக இங்கிலாந்தின் பரப்பளவுக்குச் சமம் எனலாம். விஸ்தீரணத்தையும் குடிசனத் தொகையினையும் நோக்குமிடத்து, இலங்கையினை இந்தியாவிலுள்ள மைசூர் சமஸ்தானத்துடன் ஒப்பிடலாம். தேசப்படத்திற் காணப்படும் இலங்கையின் வடிவம் யாவர்க்கும் நன்கு தெரிந்ததொன்று. இதன்வடிவம் பன்றித் தொடைபோல இருந்ததாக டச்சுக்காரர் கருதினர். இதனாலேயே ஊர்காவற்றுறையிலுள்ள கடற்கோட்டைக்கு "ஹாம்ஸ் ஹீல்" எனப் பெயரிட்டழைத்தனர்.

2——J. N. A 99440—2,507 (8/50)



குமார வீதி, கொழும்பு.

இலங்கையின் பெரும்பாகம் தாழ்ந்த சமபூமியாக இருக்கின்றது. ஆனால் தென்மத்திய பகுதியில் மலைத்தொடர்களும் குன்றுகளும் நெருக்கமாகக் காணப்படுகின்றன. சில மலைகளின் உச்சி 7,000 அடி உயரமுடையனவாகவும், சில அவற்றிற்கு மேற்பட்ட உயரமுள்ளனவாகவும் இருக்கின்றன. பல நதிகளும் சிற்றாறுகளும் ஓடுவதால் இலங்கை நீர்வளம் உடையதெனத் தொகுத்துக் கூறலாம். சிற்சில நதிகளிற் சிறு நாவாய்கள்மூலம் போக்குவரவு செய்யமுடியும். மழைவீழ்ச்சியின் சராசரி அளவு வடமேற்குப் பாகத்திலும் தென்கிழக்குப் பாகத்திலும் 40 அங்குலம் தொடக்கம் மலைநாட்டில் 200 அங்குலம்வரை வேறுபடுகின்றது.

இலங்கையின் சீதோஷ்ண நிலை கடுங் குளிராகவேனும் கடும் வெப்பமாகவேனும் இருக்கவில்லை. கரையோரப் பகுதியிலும் சமவெளிகளிலும் உஷ்ணமும் மலைநாடுகளில் மித சீதோஷ்ணமுமாக வேறுபட்டு இருக்கின்றது. பூமத்திய ரேகையிலுள்ள அல்லது அதனையடுத்துள்ள தேசங்களிற்போல பருவகாலங்கள் திட்டமாக வகுக்கப்படவில்லை. தனிப்பட்ட மாரிக்காலம் என்பதொன்றும் இங்கேயில்லை.

இலங்கை இயற்கை வளப்பம் வாய்ந்த நாடு. ஆரியர் இதனை இலங்கை என்றனர். ஒளி அல்லது விளங்குதல் எனப் பொருள்படும் இலக்கம் அல்லது இலங்குதல் எனும் சொல்லில் இருந்தே இலங்கையெனும் பெயர் உண்டாயிற்று என அநுமானிக்க இடமுண்டு.

**இலங்கை யெனுஞ் சொல்—**

“ கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தன் ”
எனச் சிலப்பதிகாரத்தி லுள்.

" இலங்கா தீவத்துச் சமனொளி யென்னுஞ்
சிலம்பினை யெய்தி "
என மணிமேகலையிலும்,

" தொன்மா விலங்கைப் பெயரொடு பெயரிய
நன் மாவிலங்கை ...... "
எனச் சிறுபாணாற்றுப்படையிலும்,

" இலங்கை யீழத்துக் கலந்தரு செப்பு "
எனப் பெருங்கதையிலும் வந்துள்ளது.

ஈழம் எனும் பெயர் இலங்கை முழுவதற்குப் பொதுவாகவும் வடபாற் கூறுகிய யாழ்ப்பாணத்திற்குச் சிறப்பாகவும் வழங்கப் பட்டிருக்கின்றது. சிங்களர் வந்து குடியேறிய பின்னர் இது " சிங்களத துவீபம் " எனப் பெயர் பெறலாயிற்று. இதனை நன்னூலுரையாசிரியராகிய மயிலைநாதர் எடுத்துக்காட்டியிருக் கின்றார். அவர் கூறுவது :—

தமிழொழி பதினேழ் நிலமாவன : " சிங்களஞ் சோனகஞ்
சாவகஞ்..........தாமிவையே "

சிங்களம் எனும் சொல்லில் இருந்தே தற்போதைய " சிலோன் " எனும் பெயர் மருவி வழங்கப்படலாயிற்று.

இலங்கையின் தலைநகராகிய கொழும்பு ஒன்றே மிகவும் பெரிய பட்டினமெனலாம். இதன் குடிசனத் தொகை ஏறக் குறைய 350,000 ஆகும். இது உலகின் கீழ்த்திசையிலுள்ள மிகப்பெரிய வியாபாரத் துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கு கின்றது. இதன் கிழக்குக் கரையிலுள்ள திருக்கோணமலை சிறந்த கடற்படைத் தளமாக மிளிர்கின்றது. டச்சுக்காரரிட மிருந்து பிரிட்டிஷார் இதனைக் கைப்பற்றியபோது, ஒரு கப்பற் படை முழுவதும் பத்திரமாகச்சென்று அமைதியாகத் தங்கி நிற்கக்கூடிய வசதியும் சிறப்பும் வாய்ந்த துறைமுகம் இந்தியா



முழுவதிலும் இதனைவிடச் சிறந்தது வேறொன்றில்லை என்றும், இந்தியாவிற்கு மேற்குப் பக்கத்திலுள்ள நாடுகள்மீது ஆங்கி லேயர் தமது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கு முக்கிய துறை முகமாக இது விளங்குகின்றது என்றும், தங்களுடைய ஆட்சியி லுள்ள நாடுகளை ஏனைய ஐரோப்பிய வல்லரசுகள் கைப்பற்றுமற் பாதுகாக்க இத்துறைமுகம் உதவிபுரிகின்றது என்றும், திருக் கோணமலை விவரிக்கப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகள் சென் றும் இலங்கை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நாடாக விருக்கும் நிலைமை மாறவில்லை.

குறிப்பிடத்தக்க வேறு பட்டணங்களும் இலங்கையில் உண்டு. இலங்கையின் கடைசி மன்னன் ஆண்ட கண்டி நகரம் ; தெற்கே கடந்த நூற்றாண்டின் பிற்பகுதிவரை சிறந்த துறைமுகமாக விளங்கிய காலி ; வடக்கே யாழ்ப்பாணம் ; சிங்களரின் புராதன பெருமை நினைவூட்டும் அநுராதபுரம் ; இந்தப் பட்டணங்களுக்கும், உலகத்தின் பல்வேறு தேசங்களிலுள்ளவர்கள் சுகத்திற்காக நம் நாட்டிற்கு வந்து தங்கும் நற்சுவாத்தியமுள்ள மலை நாட்டு இடங்களுக்கும் போக்குவரவு செய்வதற்காக 950 மைல் கொண்ட புகையிரதப் பாதையை அரசாங்கமே அமைத்து நடத்தி வருகின்றது. இங்கே 16,500 மைலுக்கு மேற்பட்ட றோட்டுகள் உண்டு. இவற்றுள் 4,200 மைல் றோட்டுகள் கல்லுப்போடப் பட்டு, மோட்டார் வண்டி முதலிய வாகனங்கள் செல்லக்கூடி யனவாக இருக்கின்றன.

# ஆரியர் குடியேற்றம்

இலங்கையின் பூர்வீக சரித்திரத்தை நோக்குமிடத்து, இந்திய நாகரிகப் போக்கெல்லாம் பண்டுதொட்டே இலங்கையையும் பாதித்து வந்தது என்பது புலப்படும். தென்னிந்தியாவிலுள்ள தஞ்சை ஜில்லாவைச்சேர்ந்த கோடிக்கரைமுனைக்கும் வடஇலங்கையிலுள்ள பருத்தித்துறைக்கு மிடையேயுள்ள தூரம் 30 மைல்தான். எனினும் இவ்விரு தேசத்தையும் பிரித்திருக்கும் சிறிய கடற்பரப்பு, இலங்கை ஒரு தனிப்பட்ட சுதந்திர நாடாக இருக்கப்பெரிதும் உதவியாக இருந்தது.


இலங்கையின் ஆதிக் குடிகளைப்பற்றிய நம்பத்தகுந்த தகவல் எதுவும் கிடைப்பதரிது. குகைகளிற் புதைந்து கிடந்து கண்டெடுக்கப்பட்ட கல் ஆயுதங்களைச் சான்றாகக் கொண்டு, மனிதர் பல்லாயிரம் ஆண்டுகளாக இலங்கையில் வசித்து வந்தனர் என அநுமானிக்க இடமுண்டு. ஆரியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில் தக்கிண தேசத்திற் குடியேறிய சாதியினரின் ஒரு கிளையினரே இலங்கையிலும் குடியேறியிருத்தல் கூடும்.

ஆரியர் முதன்முதலாக இ. மு. 500 ம் ஆண்டளவில் இலங்கையிற் குடியேறினர். இங்ஙனம் வந்தவர்களில் விஜயனும் அவனுடைய தோழர் 700 பேரும் பிரபல்யமானவர்கள். விஜயன் ராஜ வம்சத்தைச்சேர்ந்தவன் என்பது கர்ண பரம்பரை. எனினும் அவன் பம்பாய் மாகாணத்திலுள்ள "புரோச்" என்பதற்குக் கிட்டவுள்ள துறைமுகத்திலிருந்தே கப்பலிற் புறப்பட்டிருத்தல் கூடும். கங்கைப் பள்ளத்தாக்கிலிருந்தும்





பொலன்னறுவைக் கல்விஹாரையிலுள்ள புத்தர் சிலை.






கண்டி இராசமாளிகைக்குச் சொந்தமாயிருந்த செதுக்கியதிலை.

இரண்டாம் முறையாகப் பல குடிகள் இலங்கையில் வந்து குடியேறினர் எனத் தோற்றுகிறது. இவர்களின் வம்சத்தவர்களே இலங்கையிலுள்ள ஆரியக் குடிகள் எனலாம்.

விஜயன் முதலாகச் சிங்கள அரசர்கள் பலர் இலங்கையை ஆண்டுவந்தனர். இடைக்கிடை வேறு அரசர்களும் ஆண்டனர். 16 ம் நூற்றுண்டில் போர்த்துக்கீசர் வந்துசேர்ந்தனர். இலங்கையின் மத்திய பகுதியிலிருந்த கண்டி ராச்சியம் 1815 ம் ஆண்டில் பிரித்தானிய மன்னரிடம் கண்டிப் பிரதானிகளால் ஒப்படைக்கப்படும்வரை சுதந்திர அரசாக நிலைபெற்றிருந்தது.

ஈராயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட இக்காலத்தில், தென்னிந்திய அரசர்கள் இலங்கைமீது அடிக்கடி படையெடுத்துத் தாக்கினர். சோழரும் பாண்டியருமே இவர்களில் பிரதானமானவர் எனக.




கொழும்புத் துறைமுகம்

துட்டகெமுனு (கி. மு. 161–136), மகா பராக்கிரமவாகு (கி. பி. 1153–86) போன்ற சிங்கள வீரமன்னர்கள் இத்தகைய பகைவர்களைப் போரிற் புறங்கண்டு வாகை சூடியதுமன்றிப் பகைவர்களுடைய நாடுகளுக்குட் சென்றும் வெற்றிக்கொடி நாட்டியும் மீண்டனர்.

முதலாவது இராஜேந்திர சோழ (கி. பி. 1014–44) மன்னன் இலங்கை முழுவதையும் தன் ஆட்சிக்குட்படுத்திய போதுதான், இலங்கை முதன்முதலாக அந்நியர் ஆட்சிக்குட்பட்டது. பதின்மூன்றும் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் வட இலங்கையிலும் ஒரு தமிழரசு ஏற்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கை நகரம் இந்த ராச்சியத்தின் தலை நகராக விளங்கியது. இது ஒரு காலத்தில் விஜய நகர சக்கராதிபத்தியத்தின் ஆதிக்கத்தில் இருந்து திறைகொடுத்து வந்தது. பொதுவாகக் கூறுமிடத்து, இலங்கை மன்னர்கள் சிங்களராகவும் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களாகவும் இருந்தார்கள். மிகவும் பிற்காலத்தில், அதாவது, கி. பி. 1739 ம் ஆண்டளவிற்றான் சிங்கள ராஜ வம்சம் ஒழிந்தது. இதன்பின்னர் தென்னிந்தியாவைச் சேர்ந்த நாயக்க ராஜவம்சம்சாவளி ஆரம்பமாயிற்று.






கண்டிப் பெரஹராவின் மங்கள யானை

# பௌத்தம்


பௌத்த மதமே சிங்கள ராச்சியத்தைத் ஒருமுகப்படுத்தும் சாதனமாக இருந்துவந்தது. சிங்கள ராச்சியத்தில் இலக்கியமும் நுண்கலையும் அபிவிருத்தியடைவதற்கு பௌத்த பிக்குகளின் பாண்டித்தியமும் சிங்கள மன்னரின் பயபக்தியுமே காரணமாக இருந்தன. விவசாயமே சிங்களரின் பிரதான தொழிலாக இருந்தது. நீர்வளம் நிறைந்த பரந்த சமவெளிகளில் நெல் விளைவித்தல் இலகுவாதலின், அத்தகைய இடங்களில் ஆரியர்கள் குடியேறிப் பல்லாண்டுகளாக வாழ்ந்து வந்தனர். ஆறுகளிலிருந்து மேலதிகமாகப் பாயும் நீர் தேங்கி நிற்பதற்கேற்ற பெரிய நீர்த்தேக்கங்களைச் சிங்களர் அமைத்துப் பெரும் புகழ் ஈட்டினர். சில நீர்த்தேக்கங்கள் பல்லாயிரம் ஏக்கர் விசாலமுள்ளனவாக இருந்தன. கி. மு. 450 ம் ஆண்டளவில் அனுராதபுரம் இலங்கையின் முதல் தலைநகராக விளங்கியது. அதன் பின்னர் கி. பி. 1217 ம் ஆண்டளவில் பொலநறுவை சோழ மன்னர்களால் தலைநகரா யமைக்கப் பெற்றது. சரித்திரப்பெருமை வாய்ந்த இவ்விரு தலை நகரங்களிலும் காணப்படும் புராதன ஞாபக சின்னங்கள், அவற்றைக் கட்டிப் பயன்படுத்திய மன்னர்களின் பண்பாட்டையும் உயரிய குறிக்கோளையும் நினைவூட்டி நிற்கின்றன.

"இடையீடற்ற சரித்திர சம்பந்தமான கர்ணபரம்பரை இலங்கைக்கு இருப்பதுபோல இந்தியாவிலுள்ள வேறெந்த நாட்டுக்கும் இல்லை" யென கீழைத் தேசப் பாஷைகளிற் பாண்டித்தியம் பெற்ற பேராசியர் கைகர் எழுதியுள்ளார். பௌத்த மதத்தின் செல்வாக்கு இந்தியாவிற் குன்றிவிட்டபோதிலும், இலங்கையில் அது நன்கு வேரூன்றிச் செழித்து, இலங்கை மக்களின் வாழ்க்கையின் பல துறைகளிலும் ஒன்றிக் கலந்து விளங்கியது. பண்டைக் காலந் தொடக்கம் இற்றைவரை கப்பற் போக்குவரத்துப் பிரதான பாதையில் ஒரு தனித் தீவாக இலங்கை இருந்துவருகின்றது. எனவே இந்நிலைமை இந்தியாவின் அப





அழிவுற்ற புராதன சித்தலைநானை




குமார பொக்குண என்னும் கேணி

சியல் முறைகளால் இலங்கை அலைக்கப்படாமல் தப்புவதற்குப் பிறிதோர் ஏதுவாயிற்று.


இலங்கையில் முதன் முதலாகத் தம் ஆதிக்கத்தை நிறுவிய வல்லரசினர் போர்த்துக்கீசரே யெனலாம். ரோம ராச்சியத்தைச் சேர்ந்த கிரேக்க குடிகள் இலங்கையின் விளைபொருட்களை ஏற்றுமதி செய்யும் வியாபாரிகளாக இருந்தனர் என்பதற்குச் சான்றுண்டு. நான்காம் நூற்றாண்டுக்குரிய ரோம செப்பு நாணயங்கள் பெருந் தொகையாகத் தீவின் பல பாகங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் வியாபார நோக்கமாக வந்தவர்களேயன்றி இலங்கையிற் குடியேறும் நோக்கத்துடன் வரவில்லை. கி. பி. **1505** ல் புயலினால் ஏற்றுண்ட போர்த்துக்கீசர் சிலர் முதன்முதலாக இந்நாட்டிற் கால் வைத்தனர். இந்தியாவின் தென் மேற்குக் கரையோரப் பகுதியில் அவர்கள் ஏற்கெனவே ஆட்சிபுரிந்துவந்தனர். சிங்களரிடையே அரசியற் பிணக்குகளும் பிரிவினைகளும் ஏற்பட்டிருப்பதைக் கண்ட போர்த்துக்கீசர், இந்நிலைமை தமக்கு வாய்ப்பானதெனக் கருதி இத்தீவின் கரையோரப் பகுதியில் தம் அரண்களை நிறுவலாயினர்.

கி. பி. **1597** ம் ஆண்டு மே மாதம் **29** ந் திகதியன்று போர்த்துக்கல் மன்னன் முதலாவது பிலிப்பு கோட்டை அரசனாகப் பிரகடனஞ் செய்யப்பட்டான். அத்திகதி தொடக்கம் போர்த்துக்கீசர் இலங்கையின் கரையோரப் பகுதியை ஆட்சி புரிந்துவந்தனர். **1658**–ல் டச்சுக்காரர் வந்து கைப்பற்றும்வரை போர்த்துக்கீசரே இலங்கையில் ஆட்சி செலுத்திவந்தனர். போர்த்துக்கீசர் ரோமன் கத்தோலிக்க மதத்தை இந்நாட்டிற் பரவச் செய்து பலரைத் தம் மதத்திற் சேர்த்துக்கொண்டனர். டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தில் இந்நாடு செழிப்புற்றது. மேலும் கரையோரப் பகுதிகளை அவர்கள் ஆண்ட காலத்தில் ரோமன்-டச்சுச் சட்டப்பிரமாணம் அமுலுக்கு வந்தது. இதுவே இலங்கையின் பொதுவான சட்டமாக இன்றும் இருக்கிறது. **1795** ல் பிரிட்டிஷாருக்கும் டச்சுக்காரருக்குமிடையே ஏற்பட்ட பிணக்கு காரணமாக, அடுத்த ஆண்டிற்றானே டச்சுக் குடியேற்ற நாடுகள் பிரிட்டிஷர்க்கு வசமாயின.





அழிவுற்ற புராதன கட்டிடங்கள்.





சிகிரியா கற்பாறை.

# முடிக்குரிய குடியேற்ற நாடு

பிரிட்டிஷார் புதிதாகக் கைப்பற்றிய நாடுகள் சென்னைத் தேசாதிபதியின் பரிபாலனத்தில் இருந்தன. **1802** ல் முடிக்குரிய குடியேற்ற நாட்டுத் திட்டம் அமுலுக்கு வந்தது. இதன் பயனாக பிரிட்டிஷ் மந்திரி சபையின் பரிபாலனத்தின் கீழ் இலங்கை இருந்து வந்தது. அக்காலத்திலும் கண்டியை இராசதானியாகக் கொண்ட ஒரு தனி ராச்சியம் சுதந்திரத்துடன் இருந்தது. கண்டியரசனுடன் உடன்படிக்கை ஒப்பந்தம் செய்துகொள்ள பிரிட்டிஷார் பலவகையான முயற்சிகள் செய்தும் பயன்படவில்லை. ஆனால் கண்டிப் பிரதானிகள் அந்நிய அதிகாரிகளுடன்சேர்ந்து தமது அரசனுக்கு விரோதமாகச் சூழ்ச்சிசெய்தனர். பிரதானிகளுள் ஒருவன் கண்டி ராச்சியத்தைக் கைப்பற்றவும் முயன்றான். **1798** ல் கண்டி யரசன் இறந்ததும், அவனுடைய இனத்தவனும் இலங்கையிற் பிறந்தவனுமாகிய நாயக்க வம்சத்து இளவரசன் ஒருவன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் என்னும் சிங்காசனப் பெயருடன் முடி சூட்டப்பெற்றான். சிங்கள ராஜ வம்சம் **1739** ம் ஆண்டுடன் அற்றுவிட்டது என்பதை யாம் இச்சந்தர்ப்பத்தில் மறந்துவிடக்கூடாது.

கண்டிப் பிரதானிகளுக்கும் அரண்மனை உத்தியோகத்தர்களுக்குமிடையே ஏற்பட்ட பிளவு ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் காலத்திலும் தொடர்ந்திருந்தது. அப்பொழுது தேசாதிபதியாக இருந்த சேர் பிரெடறிக் நோர்த் அத்தகைய அரிய சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடவில்லை. அவர் தமது இராணுவப் படைகளை அனுப்பிக் கண்டியர்மீது படையெடுத்தார். கண்டியரசனும் பயிர் பச்சைகளுக்கு நெருப்பு வைத்தழிக்கும் கொள்கையைக் கையாண்டான். கண்டிப் போர் இங்கிலாந்திலும் நல்லெண்ணத்தை உண்டாக்கவில்லை. நோர்த் தேசாதிபதி **1805** ல் தமது பதவியை விட்டு நீங்கினார். அவருடைய இடத்துக்கு சேர் தொமஸ் மெயிற்லண்ட் நியமிக்கப்பட்டார். பல துறைகளிலும்



சிறந்து விளங்கிய சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் புதிய தேசாதிபதிக்குப் பக்கபலமாகவிருந்து கடமையாற்றிவந்தார். இவர் முதலில் அட்வக்கேற் ஜெனாலாகவும், பின்னர் பிரதம நீதியரசராகவும் பதவி வகுத்தார். விவசாய அபிவிருத்தியிலும் நீர்ப்பாசன வேலைகளைத் திருத்தி யமைப்பதிலும் அவர் அதிக ஊக்கமெடுத்தார். ஜூரித்துரைமார் மூலம் வழக்குகளை விளங்கும் முறையை இவர் நிறுவியது மன்றி, அடிமை வேலையையும் அறவே ஒழித்தார். பிரதிநிதித்துவ ஆட்சிக்குரிய திட்டத்தையும் இவர் வகுத்தார். சட்ட நிரூபண சபை முறையை நிறுவுமாறு சிபார்சு செய்தார். ஆனால் இவருடைய சிபார்சுகளை அக்காலக் குடியேற்ற நாட்டு மந்திரி ஏற்றுக்கொள்ளவில்லை.

கண்டி ராச்சியம் **1815** ம் ஆண்டில் பிரித்தானிய ராச்சியத்தின் ஆட்சிக்குட்பட்டது. கண்டிப் பிரதானிகளிடையே ஒற்றுமையின்மையும் நம்பிக்கைத் துரோகமும் சூழ்ச்சியும் ஏற்பட்டதுடன் ஏனையவர்களும் அரசனைப் பகைக்கத் தொடங்கியதால், இவ்வீழ்ச்சி விரைவில் ஏற்பட்டது. பிரித்தானியப் படைகள் கண்டியரசனைக் கைதுசெய்தபின்னர், கண்டிப் பிரதானிகள் ஆங்கிலேயர்களின் விருப்பத்தைத் தாம் நிறைவேற்றுவதாகச் சொல்லி, கண்டிராச்சியத்தை பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்தனர்.



இலங்கை இந்திய பிரதமர்கள்.

# மக்கள்

இலங்கையின் குடிசனத் தொகை ஏறக்குறைய 6,700,000 ஆகும். இதில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கினர் சிங்களர். ஆதியில் வந்து குடியேறிய ஆரியர்கள் இலங்கையி லிருந்த பழங்குடிகளுடன் கலப்பு மணஞ்செய்து பெருகினர். இவர்களின் வழித் தோன்றல்களே சிங்களர் எனப்படுவர். அனேக சனங்கள் கூட்டம் கூட்டமாக வந்து குடியேறி இவர்க ளுடன் கலந்துகொண்டனர். தமிழருட் பெரும்பாலோரும் இவர்களுடன் கலந்துகொண்டனர். சிங்களரில் தமிழ்க் கலப்பு அதிகமுண்டு. ஆகவே சிங்களர் ஒரு கலப்புச்சாதி எனலாம்.

சிங்களர் பூர்வீக காலம் தொடக்கம் தனித்ததொரு பாஷை யைக் கையாண்டனர். இது முதலில் பிராமி எழுத்துக்களைக் கொண்ட ஆரிய பாஷையாக இருந்தது. பின்னர் அநேக சம்ஸ் கிருத பாளிச் சொற்கள் இப்பாஷையிற் கலந்து அதனை வளம் பெறச் செய்தன. சிங்கள மொழியின் அமைப்பும், தமிழ்ச் சொற்கள் அதிகம் அதில் விரவியிருத்தலும், தமிழ்க் கலப்புக்குச் சான்றாகும்.

சிங்களர் தங்கள் அரசியல் முறைகளையும் இந்தியாவிலிருந்தே கொண்டுவந்தனர் எனலாம். ஒவ்வொரு கிராமத்திலும் "கம் ஸபா" எனும் பஞ்சாயத்து முறை அக்கிராமத்திலுள்ள விவ காரங்களைக் கவனிப்பதற்காக அமைக்கப்படலாயிற்று. 2,400 ஆண்டுகளாக ஏற்பட்ட பல மாறுதல்களிலிருந்தும் உயிர்தப்பிய கிராமச் சங்கம் இலங்கையின் தற்கால அமைப்பிலும் இடம் பெறலாயிற்று. சிங்களர் இந்துக்களின் சமுதாய முறைகளைக் கையாண்டு வந்தனர். ஆனால் பௌத்த மதக் கொள்கைகளால் அம்முறை பாதிக்கப்பட்டு ஓரளவுக்கு மாறுதல் அடைந்ததெனலாம். சாதிக் கட்டுப்பாட்டு முறை இந்தியாவிற்போல அவ்வளவு கடினமாக அனுசரிக்கப்படவில்லை. சிறுபிள்ளை மணமும் பர்தா முறையும் இங்கு அனுஷ்டிக்கப்படுவதில்லை.





பனையோலையால் பெட்டி இழைத்தல்.

மேனாட்டுச் சிங்களர், கீழ்நாட்டுச் சிங்களர் என சிங்களரை இருபெரும் பிரிவாக வகுக்கலாம். மேனாட்டுச் சிங்களரைக் கண்டியர் எனப் பொதுப்படக் கூறுவது வழக்கம். இப்பாகுபாடு சரித்திர பூர்வமாக அமைந்ததெனலாம். ஏனெனில் கண்டியர் எனப்படுவோருட் பெரும்பாலார் கடைசிக் கண்டி மன்னனுக்கு ராஜவிசுவாசம் செய்துகொண்டவர்களின் வழித்தோன்றல்களாவாராதலின் என்க. தொழிலை ஓரளவுக்கு அடிப்படையாகக் கொண்ட சாதிக் கட்டுப்பாட்டு முறை இனப்பாகுபாட்டிலிருந்தே ஆரம்பமாயிருத்தல் கூடும். சாதிக்கட்டுப்பாடுகள் இப்பொழுது தளர்வுற்று சாதி வேறுபாடின்றிக் கலியாணங்கள் நடைபெற்றுவருகின்றன.

சிங்களருட் பெரும்பாலோர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள். சிறுபான்மையோருட் குறிப்பிடத்தக்க தொகையினர் கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றனர். அசோகச் சக்கரவர்த்தி அனுப்பிய தூதர்கள் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பௌத்த சமயத்தைக் கொண்டுவந்தனர். அக் காலத்தில் இலங்கையில் ஆட்சிபுரிந்தவன் தேவநம்பியதீசன். இவன் கி. மு. 247 தொடக்கம் 40 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்த காலத்தில், பௌத்த மதத்தை இலங்கையில் நிலைநாட்டினன். "மகிந்தன் தன் நான்கு பரிவாரங்களுடன் இலங்கா துவீபத்துக்குச் சென்று பௌத்த மதத்தை நிலைநாட்டி அங்குள்ள மக்களைத் தளையினின்றும் நீக்கிவிட்டார்" என்று தீபவம்சம் எனும் பாளி நூல் கூறுகின்றது. "மக்களுடைய வாழ்க்கையிலும் ஒழுக்கத்திலும் பௌத்த மதம் செல்வாக்குப்பெற்று, அவர்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் உருவாக்கி, தேசீய ஒற்றுமைக்கு வழி காட்டும் தீபமாக" விளங்கியது.

1946 ம் ஆண்டுக் குடிசன மதிப்பின்போது பௌத்தர்கள் ஏறக்குறைய 4,288,000; இந்துக்கள் 1,326,000; கிறிஸ்தவர்கள் 606,000; முஸ்லீம்கள் 433,000; ஏனையோர் 5,000 பேர் எனக் காணப்பட்டது.

சிங்களருக்கு அடுத்தபடியாக அதிகப்படியானோர் தமிழர்களே. இவர்களுள் 800,000 க்கு மேற்பட்டவர்கள் இலங்கைத் தமிழர் ஆவர். இவர்கள் வட இலங்கையிலும் கிழக்கு இலங்கையிலும், இலங்கையின் ஏனைய பாகங்களிலும் வசிக்கின்றனர். இவர்களும் சிங்களரைப் போலவே நெடுங்காலமாக இலங்கையில் வசித்து வருகிறார்கள். இவர்கள் ஒரு காலத்தில் தனி இராச்சியம் நடத்திவந்தனர் என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது. இவர்கள் சோழ, பாண்டிய நாடுகள் உட்பட இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து வந்து குடியேறியுள்ளனர். சோழ நாடு தஞ்சாவூர் ஜில்லாவை அடக்கியிருந்தது. பாண்டிய நாடு தற்போதைய மதுரையின் பெரும் பகுதியையும் திருநெல்வேலி ஜில்லாவையும் அடக்கியிருந்தது. சிங்கள ராச்சியத்திலும் தமிழர் பிரதான ஸ்தானம் வகித்தனர். விசேஷமாக 7 ம் நூற்றாண்டு தொடக்கம் 11 ம் நூற்றாண்டுவரை அவர்கள் செல்வாக்குடன் இருந்தனர். "பிரதம மந்திரி தொடக்கம் பல வகையான உத்தியோகங்களையும் அவர்கள் வகித்தனர். மேலும் அரசனாவதற்குப் பலர் அபேட்சித்து நிற்பின், முடி சூடுதற்குத் தகுதியுடையவர் யார் என்பதைத் தமிழர்களே தீர்மானித்தனர்". இலங்கைத் தமிழர் ஊக்கமுடைய ஒரு சாகியத்தார். கல்வியூட்ட ஏற்பட்ட வசதிகளை அவர்கள் கை நெகிழவிடவில்லை. அவர்கள் சிங்களரைப் பார்க்கிலும் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையில் நாட்டமுடையவராயிருக்கின்றனர். பெரும்பாலோர் விவசாயிகள். ஆனாலும் இலங்கைத் தமிழர்கள் அரசாங்க சேவையில் பெருந் தொகையாகச் சேர்ந்திருக்கின்றனர். பலர் வெவ்வேறு சிறந்த உத்தியோகத் தொழிற்றுறைகளிலும் இருக்கின்றனர். அவர்களுள் அநேகர் கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றனர் எனினும், அதிகப்படியானோர் இந்துக்களே.

சிங்களருக்கும் இலங்கைத் தமிழர்கட்கும் இடையேயுள்ள வேற்றுமை சரித்திர சம்பந்தமான அடிப்படையைக் கொண்டதாகும். இதனை டக்டர் ஜீ. சீ. மெண்டிஸ் அவர்கள் தமது "இலங்கையின் பூர்வ சரித்திரம்" எனும் நூலில் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். அவர் கூறுவதாவது :—

"தமிழரசு ஏற்பட்டதனால் இலங்கையில் இதுவரை ஏற்படாத சில புதிய பிரச்சினைகள் கிளம்பின. இலங்கையில் இதுவரை சிங்களமே பிரதான பாஷையாகவும், பௌத்த மதமே முக்கியமான மதமாகவும் இருந்துவந்தன. ஆனால் தமிழரசு ஏற்பட்டதும் தமிழ் இராச்சியத்தில் தமிழே பிரதான மொழியாயிற்று. இந்து சமயம் முக்கியமான சமயமாயிற்று. சிறிது காலத்துள் பொருளாதார சம்பந்தமாகவும் ஒரு வித்தி

யாசம் உண்டானது. தமிழ் இராச்சியம் வரண்ட பிரதேசத்தை அடக்கி யிருந்ததால், இப்பிரதேசத்துக்கு ஏற்ற முறையில் தமிழர்கள் விவசாயஞ் செய்தார்கள். சிங்களர் வரண்ட பிரதேசத்தைச் சிறிது சிறிதாகக் கைவிட்டு, விளைவு அதிகமாயுள்ளதும், நெல்லு மாத்திரமன்றி வேறு விளைபொருட்களையும் உண்டாக்கக் கூடியதுமான குளிர்ந்த பிரதேசங்களுக்கு மெதுவாகச் சென்றார்கள். இதனால் இவ்விரு சாதியாரிடையிலும் பெரிய வித்தியாசங்கள் உண்டாயின. இப்போது இவர்களிடையேயுள்ள வித்தியாசத்திற்கும் ஓரளவிற்கு இதுவே காரணம் எனலாம்.”

1946 ம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பின்படி ஏறக்குறைய 370,000 இலங்கைச் சோனகர்கள் இருந்தார்கள். “மூர்” எனும் ஆங்கில பதம் இவர்களைக் குறிக்கப் போர்த்துக்கீசரால் கையாளப்பட்டது. போர்த்துக்கீசர் இப்பதத்தை ஸ்பானியரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் ஸ்பானியர் மொரக்கோ தேசத்தினரை “மூர்” என்ற பெயரிட்டழைத்துவந்தனர். ஏழாம் நூற்றாண்டிற்றான் முஸ்லீம்கள் இலங்கையில் முதன் முதலாகக் காணப்பட்டனர். 14 ம் நூற்றாண்டில் “இபின்பட்டுடா” எனும் பேர்பெற்ற யாத்திரீகர் இலங்கையைத் தரிசித்தபொழுது, கொழும்பு நகரில் “வஸீரும் கடற்றலைவனுமான ஜாலஸ்தி என்ற முஸ்லிம் அபிஸீனிய வீரர்களுடன் ஆட்சிபுரிந்தான்” என்று குறிப்பிடுகின்றார். இலங்கைச் சோனகருட் பெருந் தொகையினர் விவசாயிகள். இவர்கள் கீழ் மாகாணத்தில் வசிக்கின்றனர். பலர் வியாபாரத் தொழிலிலும் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள் எல்லாரும் இஸ்லாம் சமயத்தினர். செல்வக் குடும்பங்களிலுள்ள முஸ்லிம் பெண்களும் நகரில் வாழ்கின்ற முஸ்லிம் பெண்களும் “பர்தா” முறையை அநுசரிக்கின்றனர். இலங்கைக்கு வந்த அராபிய வர்த்தகர்கள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள முஸ்லிம்களை மணமுடித்தனர். இவர்களின் வழித்தோன்றல்களே “மூர்” எனப்படுவர்போலும்.

பறங்கியர் எனப்படும் இன்னொரு சாகியத்தாரைப்பற்றியும் குறிப்பிடவேண்டும். இவர்கள் தொகையிற் குறைந்திருந்தாலும் அரசாங்க சேவையிலும் பொதுசன வாழ்க்கையிலும் சிறந்த ஸ்தானம் வகித்து வந்தனர். இவர்களுட் பலர் டச்சுக்



கிழக்கிந்திய கம்பனியின் கீழ்ச் சேவை புரிந்தவர்களின் வழித்தோன்றல்களே. 40,000 பேர்வரை கொண்ட இச்சிறு தொகையினருட் பலர் தலைசிறந்தவர்களாக விளங்கினர். சகல சாகியத்தாரிடையேயும் கல்வி அதிவிரைவாகப் பரவிவருகின்றபடியால், அவர்கள் முன்னொருபோது அனுபவித்த சலாக்கிய நிலைமை பாதிக்கப்பட்டு வருகின்றதெனினும், இலங்கையின் முன்னேற்றத்துக்கு அவர்கள் இப்பொழுதும் பூரண உதவி அளித்து வருகின்றனர்.

இலங்கையிலுள்ள மலாயரும் இஸ்லாம் மதத்தைச்சார்ந்தவர்களே. இவர்களின் தொகை ஏறக்குறைய 20,000 ஆகும். இவர்கள் டச்சுக்காரரும் பிரிட்டிஷாரும் வைத்திருந்த மலாய இராணுவப் படையினரின் வழித்தோன்றல்களாவர்.

இன்னொரு சிறு தொகைச் சாகியத்தார் பிரிட்டிஷார் ஆவர், இவர்களின் முழுத் தொகை 6,000 க்கு மேற்படாது. அரசாங்க சேவையிலிருந்த இச்சாகியத்தாரின் தொகை அருகிக் கொண்டே வருகின்றது. ஐரோப்பியருட் பெரும்பாலார் வர்த்தகர்களாகவும், தோட்டத் துரைமார்களாகவும் தம்மவர்க்குச் சொந்தமான ஷாப்புக்கள், கம்பனிகளில் உதவியாளர்களாகவும் இருக்கின்றனர். இலங்கை வர்த்தகத் துறையில் அவர்கள் செல்வாக்குடையவர்களாகவே யிருக்கின்றார்கள். பெருந் தோட்டங்கள், வங்கிகள், ஏற்றுமதி இறக்குமதிச் சாலைகள், எஞ்ஜினியரிங் தொழிற்சாலைகள் பல பிரித்தானிய முதலைக்கொண்டே நடைபெறுவதே இச்செல்வாக்கிற்குக் காரணம் எனலாம்.



கண்டிச் சிங்கள நடனம்.

# இந்தியர்


இலங்கையின் குடிசனத் தொகையில் ஏறக்குறைய எட்டிலொரு பங்கினர் இந்தியர் எனச் சொல்லப்படுகின்றது. இவர்களுட் பெரும்பாலோர் தேயிலை றப்பர் தோட்டங்களில் தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் பெரும்பாலும் மதுரை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம் என்னும் இடங்களிலிருந்து வந்தவர்களே. இவர்கள் தமிழர்கள்; இந்து சமயத்தினர். இலங்கையிலுள்ள இந்தியர்களின் தொகையிற் கூடிய இன்னொரு சாகியத்தார் மலையாளிகள். இவர்கள் மலையாளக் கரையிலிருந்து, அதாவது திருவிதாங்கூர், கொச்சி, பிரிட்டிஷ் மலபார் என்னுமிடங்களிலிருந்து வந்து தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களாகவும், வீட்டு வேலைக்காரர்களாகவும், சிறு வியாபாரிகளாகவும், கள் இறக்குபவர்களாகவும் வேலை பார்க்கின்றார்கள்.

இலங்கை வர்த்தகத்தின் முக்கிய பகுதி இந்தியர் கையிற்றான் இருக்கின்றது. பண முதலீடு செய்வோரும் கொந்தராத்து எடுப்போரும் புதுக்கோட்டை சமஸ்தானத்திலும் இராமநாதபுர ஜில்லாவிலும் இருந்துவந்த நாட்டுக்கோட்டை நகரத்தாரே பெரும்பாலோர் எனலாம். ஜவுளி வியாபாரம் கத்தியவாரிலிருந்து வந்த மெமன்ஸ் எனும் சாகியத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றது. பட்டுச்சேலை, புறொக்கேட் முதலிய உயரிய துணிகள் வியாபாரம் ஸிந்தி வியாபாரிகளால் நடத்தப்படுகின்றது. பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த குஜராத்தியருட் சிறு தொகையினர் இலங்கையில் வியாபாரஞ்செய்கின்றனர். மேற்கு இந்தியாவிலிருந்து வந்த "போரா" சாகியத்தார் உணவுப்பொருட்கள் மொத்தமாக ஏற்றுமதி இறக்குமதி

செய்யும் பெரிய வர்த்தகர்களாக இருக்கின்றார்கள். தென்னிந்தியாவைச் சேர்ந்த பரத வகுப்பினரிற் பலர் சிறு கடைக்காரர்களாகவும் கரிமடுவ வேலையாட்களாகவும் இருக்கின்றனர். "நாடார்" எனப்படுவோர் சிறு வியாபாரிகளாக இருக்கின்றனர். கரையோரச் சோனகர் எனப்படுவோர் மலபார், கொரமண்டல் கரையோர நாடுகளிலிருந்து வந்த முஸ்லிம் வியாபாரிகளாவர். "பார்ஸி" சாதியத்தாரும் ஒரு சிறு தொகையினர் இங்குளர். அவர்களின் தொகையோ வியாபார நாட்டமோ அதிகம் அபிவிருத்தியடைவதாகத் தெரியவில்லை. பலுக்கிஸ்தானிலிருந்து வந்த ஒரு சிறு கூட்டத்தினர் வட்டிக்குக் கடன் கொடுக்கும் லேவாதேவித் தொழிலைச் செய்து வருகின்றனர்.


பெரிய பிரித்தானியாவில் அல்லது ஐக்கிய அமெரிக்க நாடுகளிற் குடியேறிய ஐரோப்பியர் அவ்வவ் விடங்களில் உள்ள குடிகளுடன் கலந்துகொண்டனர். இலங்கையில் பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் இப்பொழுது நிரந்தரமாக வசிக்கின்றனரெனினும், இலங்கைக் குடிகள் எனப் பொதுப்படக் கூறப்படும் மக்களுடன் இவர்கள் கலந்துகொள்ளவில்லையென்றே சொல்லலாம். ஒரு சாதியினர் இன்னொரு சாதியினருடன் கலந்து வாழ்கின்றனர் என்பதற்குச் சிறந்த சான்று அவர்களினிடையே கலப்புமணம் நிகழ்வதாகும். இந்தியருட் பெரும்பாலோர் இந்து மதத்தினர்; சிங்களருட் பெரும்பாலோர் பௌத்த மதத்தினர். இவர்களிடையே கலப்புமணம் மிக அரிது. ஆனால் இந்தியத் தமிழ் இந்துக்களும் இலங்கைத் தமிழ் இந்துக்களும், பாஷை, சாதி சமயங்களின் ஒன்றாக இருந்தபோதிலும், அவர்களுக்கிடையேயும் கலப்புமணம் அதிகம் என்று சொல்லிவிட முடியாது. இந்தியாவே தங்கள் நிரந்தர தாயகம்; இனிமேலும் அங்ஙனமே இருந்துவரவேண்டும் என்ற மனப்பான்மை இந்தியருட் பெரும்பாலாரிடையே நிலவி வருகின்றது. இந்தியர் இலங்கையின் ஒரு தனிச் சமூகமாக வாழ்ந்துவருதற்கு இத்தகைய மனப்பான்மையும் ஒரு பிரதான காரணமெனலாம்.





சிகிரிய குன்றின் வாயில்.

3—J. N. A 99440 (8/50)



ஓர் தென்னந் தோட்டம்

யிடத்து பிற்காலத்தில் இராசமாலிகைராக (கொலோனியல் காரியதரிசி) இருந்த சேர். எமேர்சன் ரெனைற் பின்வருமாறு ஒரு சந்தர்ப்பத்தில் எழுதியுள்ளார் :—

"தேசாதிபதியும், ஆலோசனைச் சபையினரும், இராணுவத்தினரும், நீதிபதிகளும், மதக் குருமாரும் சிவில் சேர்வின் அதிகாரிகளுடன் அனைவரும் பெரும் மலைநாடுகளுக்குச் சென்று முடிக்குரிய காணிகளை யெல்லாம் வாங்கினர். ஏலத்திலே மற்றவர்கள் போட்டியிட்டு விலைகூறி இந்நிலங்களை வாங்குவதைக் கொள்ளைலாபம் அடிக்கக் கருதிய இவர்கள் அடக்கி, தாமே அந்நிலங்களை வாங்கினர்."

தேயிலை, கோப்பி, ரப்பர், தெங்காய் என்னும் இன்னோரன்னவை சம்பந்தமான விவசாயக் கைத்தொழில்கள் பல்கின. இப்பொருட்கள் அபரிமிதமாக வேற்றுநாடுகளுக்கு ஏற்றுமதியாகிச் செல்வம் பெருகியது. தொழில் பல்கிச் செல்வம் பெருகக் குடிசனத் தொகையும் அதிகரித்தது. ஆனால் இவ்வாறு அதிகரித்த குடிசனத் தொகையைத் தன்னகத்தே அடக்குதற்கான நிலத்தை ஈரலிப்புவலயம் கொண்டிருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் குடிசனத் தொகை 10 லட்சத்திலிருந்து ஏறக்குறைய 70 லட்சமாகப் பெருகியதென்றால், அதன் பெருக்கவீதத்தை யாம் ஒருவாறு மதிப்பிட்டுக் கொள்ளலாம். இன்னும் அபிவிருத்தி செய்யப்படாது தரிசாக்க கிடக்கும் நிலப்பரப்பு அதிகமுண்டு. ஆனால் இது பெரும்பாலும் மலேரியாச் சுரம் தாண்டவமாடும் வரண்ட வலயத்திற்றான் இருக்கிறது.

அரசாங்க சபை 1931 ம் ஆண்டில் அங்குரார்ப்பணஞ் செய்யப்பெற்றதிலிருந்து வரண்ட வலயத்தை அபிவிருத்தி செய்வதிற் போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றுதான் கல் ஓயாத் திட்டம். நீர்ப்பாசன, கைத்தொழில் அபிவிருத்திக்கான பல நோக்கம்கொண்ட திட்டம் இது. அமெரிக்க எஞ்சினீர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றக் கையேற்று ஊக்கத்துடன் உழைத்து வருகின்றனர். நிலமற்ற கிராமவாசிகளுக்கு நிலம் கொடுத்துக் குடியேறச் செய்யவும், நடுத்தர வகுப்பு விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதற்கும் குடியேற்றத் திட்டங்கள் பல அமைக்கப்பெற்று, அதற்


கான வேலை ஊக்கமாக அபிவிருத்தி யடைந்துவருகின்றது. எங்களுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் உணவுப் பொருளின் அரைவாசிப் பங்கினை அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால், எங்கள் நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டைக் கடந்த யுத்தம் எங்களுக்கு நன்கு வற்புறுத்திக் காட்டியுள்ளது.

இலங்கை மக்கள் பெரும்பாலும் வர்த்தகத்தை விரும்பாது, அரசாங்க சேவையிலும் உத்தியோகங்களிலும் விவசாயத் தொழில்களிலும் நாட்டங் கொண்டனர். காலியும் மாதோட்டமும் சிறந்த வியாபாரத் துறைகளாக விளங்கிய பண்டைக் காலத்திலும், இவ்வித நாட்டமே இருந்து வந்ததென அறியக் கிடக்கின்றது.

இலங்கை வங்கி விசாரணைச் சபைக்குத் தலைமை தாங்கியவரும், வங்கித்துறையில் பேர்பெற்ற இந்திய வங்கிக்காருமான சேர். சொராப்ஜி பூஞ்சுவாலா அவர்கள் இவ்விஷயத்திற் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :—

"இலங்கைக் குடிசனத் தொகையின் 100 க்கு 80 வீதமானோர் நிலம் உடையவர்களாய், தங்களை முற்றாகவேனும் ஓரளவுக்கேனும் தாபரிப்பதற்காக அந்நிலத்தின் விளைபொருளாற் பெறும் ஊதியத்தைப் பயன்படுத்துகின்றனர்........ இலங்கையின் வர்த்தகத்தை முன்னூறு ஆண்டுகட்கு மேற்பட போர்த்துக்கீசரும் டச்சுக்காரரும் பிரிட்டிஷாரும் இந்தியரும் சுரண்டி வந்ததை இலங்கைச் சரித்திரம் குறிப்பிடுகின்றது. இப்பொழுதுதானும் இலங்கையின் வர்த்தகம் முழுவதும் அந்நியரால் அந்நிய மூலதனத்தைக் கொண்டும் அந்நிய தொழிலாளரைக்கொண்டும் நடத்தப்பெற்றுவருகின்றது. இலங்கையின் வியாபாரம், வர்த்தகம், கைத்தொழில் ஆதியவற்றை இலங்கையரல்லாதார் முற்றாகக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்து கின்றனர். மேலும் சாதாரண இலங்கையர் வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் பொதுவாக ஈடுபட அரசாங்கமாவது தனிப்பட்ட வியாபார ஸ்தாபனங்களாவது போதிய சந்தர்ப்பங்களை அளிக்கவில்லை. இத்தகைய பொருளாதார முறையின் குறைபாட்டை இலங்கையர் கடைசியாக உணர்ந்து அதனைச் சீர்ப்படுத்த முயல்கின்றனர் என்று கருத இடமுண்டு".





கலப்பற்ற விதைநெல்லும் கலப்பன நெல்லும்.



விவசாயப் பாடசாலையொன்றில் பயிற்சிபெறும் மாணவிகள்.

# கல்வியும் சமுதாய சேவையும்

இலங்கை மன்னர் ஆட்சி புரிந்த பண்டைக் காலத்தில் பௌத்த பிக்குகள் சங்கமே கல்விக்குப் பொறுப்பாக இருந்தது. உயர்தரக் கல்விக்காகப் படாசாலைகளை நடத்திவந்தது இச்சங்கம். அரசன் ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலைகளை நிறுவி, அதற்குப் பொறுப்பாக பௌத்த பிக்குகளையே அமர்த்தினன். அப்பாடசாலையிற் கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து எவ்வித கைம்மாறும் ஏற்கக்கூடாதென்றும், பிக்குகளுக்கு வேண்டிய உதவியைத் தானே செய்துவைப்பதாகவும் அரசன் கட்டளையிட்டான். முடியரசு முறை ஒழியவே, மேற்கூறிய முறையும் கைவிடப்படலாயிற்று. எழுத வாசிக்கத் தெரிந்தோர் தரமும் குன்றத் தொடங்கியது. கரையோர மாகாணங்களின் ஆட்சியைக் கைப்பற்றிய ஐரோப்பிய வல்லரசுகள், 16 ம் நூற்றாண்டு தொடக்கம் பாடசாலைகளை நிறுவிவந்தன. தம்மதத்திற் பலரைச் சேர்த்துக்கொள்வதே அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. போர்த்துக்கேசர் ரோமன் கத்தோலிக்க பாடசாலைகளை நிறுவினர். டச்சுக்காரர் ஆதிக்கம் செலுத்தியபோது, இராமங்களைக் கோயிற்பற்றுகளாகப் பிரித்து ஒவ்வொரு கோயிற்பற்றிலும் பாடசாலை நிறுவி, புரொட்டஸ்தாந்த கிறிஸ்தவ மதத்தை வற்புறுத்திவந்தனர். அதற்குப் பின்வந்த பிரிட்டிஷாரும் அதே முறையைக் கைவிடவில்லை. மாணவர்களுக்கு ஊட்டப்படும் கல்வி கிறிஸ்தவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர். எனவே எல்லாப் பாடசாலைகளும் பின்பற்றவேண்டிய ஓர் ஆதார விதியை ஏற்படுத்தினர். கிறிஸ்தவ சமயத்தைப் போதிப்பதற்கு ஒரு மணித்தியாலம் செலவிடப்பட வேண்டுமென்பதே அவ்விதி. வேறு கிறிஸ்தவ மிஷன்களும் இவ்வேலையில் ஈடுபட்டிருந்தன. பப்டிஸ்ற் மிஷனரிமார் 1812 ம் ஆண்டிற் பாடசாலைகளை ஸ்தாபித்தனர். அது போலவே 1814 ம் ஆண்டில் உவெஸ்லியன் மிஷனும், 1816 ம் ஆண்டில் அமெரிக்க மிஷனும், 1818 ம் ஆண்டில் சேச் மிஷனரி சபையும் பாடசாலைகள் ஸ்தாபித்தன.





மகளிர் மத்தியஸ்தானத்தில் வேலைக்கியா பாய் இழைத்தல்.




சிகிரிய சித்திரம்.

பொதுஜன வற்புறுத்தலின் பேரில் அரசாங்கம் சகல மத ஸ்தாபனங்களையும் பட்சபாதமற்ற முறையில் நடத்தும் கொள்கையை மேற்கொண்டது. அரசாங்கம் அங்கீகரித்த பாடசாலைகளுக்கு அற்ப உதவிப் பணம் அளிக்கப்பட்டது. மிகவும் பிற்காலத்தில் பௌத்தர்களும் இந்துக்களும் தங்களுக்கென வித்தியாபிவிருத்திச் சங்கங்களை நிறுவி, பாடசாலைகள் இன்றியமையாத இடங்களில் அவற்றை ஆரம்பித்துப் பரிபாலித்துவந்தனர். பிரமாணங்களுக் கமைந்த உதவிபெறும் பாடசாலைகளுக்கு அரசாங்கம் பண உதவி அளித்துவந்தது.

ஓர் நாட்டிலே அந்நியர் அதிகாரம் செலுத்தினால் அவ்வந்நியரின் பாஷைக்கே முதல் ஸ்தானம் கொடுத்து அதன் பயனைப் பெரு நன்மைபெற வேண்டும் என நினைத்துக் கருமம் ஆற்று





கண்டி தலதா மாளிகை.

வது பாடு. ஆகவே இலங்கையிலும் பொது மக்களுக்கு வேண்டிய கல்வியிலும்பார்க்க ஆங்கிலப் பாடசாலைக் கல்விக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆங்கிலக் கல்வியூட்டுவது சிறந்த முதலீடாகும் எனப் பெற்றோர் கருதினர். இளைஞர்கள் சரீரத்தால் பாடுபட்டுச் செய்யும் வேலையை இழிவானதாகக் கருதி கிராம வாழ்க்கையிலிருந்து விடுபட்டுச் சீரான வாழ்க்கையைப்

பெறுவதற்கு வழி ஆங்கிலக் கல்வியேயாகும் எனக் கருதினர். எனவே பொது மக்களிலிருந்து பிரிந்து வேறுபட்ட சிறுபான்மையினர் என்ற ஒரு கூட்டம் உருவாகியது. ஆங்கிலத்தை மட்டும் இவர்கள் கற்றதனால் தேசிய அபிமானம் என்பது இவர்களிடையே இல்லாதிருந்தது. தேசிய பாஷையும் நாட்டின் சரித்திரமும் பண்பாடும் அலட்சியஞ் செய்யப்படலாயின. கற்றவர்கள் எனக் கருதப்பட்ட இவர்களிற் பலர் தம் தாய்ப்பாஷையைப் பிழையின்றிப் பேசவேனும் எழுதவேனும் தெரியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் வீட்டிலும் ஆங்கில பாஷையே பேசிவந்தனர். அவர்கள் தங்கள் பிரார்த்தனைகளைத்தானும் அந்நிய பாஷையிற் சொல்லி வந்தார்கள். அவர்களுடைய பிள்ளைகளும் வேறு எதையும் அறிந்துகொள்வதற்குரிய வசதிகள் வாய்க்கப் பெறாதவர்களாக இருந்தனர்.

வயது வந்தோர்க்கு இப்போது வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளபோதிலும், ஆங்கிலம் கற்ற சிறுபான்மையினர்க்கும் பொது மக்கட்கும் இடையே அதிக வித்தியாசம் இருந்துதான்வருகிறது. கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் வாய்க்கப்பெற்றவர்கள் கிராமத்தைக் கைவிட்டு நகரத்திற் குடியேறினர். இதன் பயனாக நிலங்களின் சொந்தக்காரர்கள் அந்நிலங்களில் வசிக்காத நிலைமை ஏற்படலாயிற்று. தலைவர்கள் இன்றியமையாத கிராமங்களில் அத்தகைய தலைவர்கள் இல்லாதிருந்தனர். ஆனால் இலங்கையின் குடிசனத் தொகையில் குறைந்தபட்சம் 85 சதவீதமானோர் கிராமங்களிலேயே வசிக்கின்றனர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது ; பாலர் வகுப்பு தொடக்கம் சர்வகலாசாலைப் படிப்புவரை இலவசக் கல்வியளிக்கும் புரட்சிகரமான திட்டம் சட்ட முறைப்படி அண்மையில் அமைக்கப்படலாயிற்று. ஆரம்ப கல்வி வகுப்புகளில் ஐந்தாம் வகுப்புவரை தாய்ப் பாஷையில் கல்விபுகட்டப்படுகின்றது. ஆங்கிலம் ஒரு கட்டாய துணைப்பாஷையாகக் கற்பிக்கப்படுகின்றது. இத்திட்டம் பூரணமாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதும், அரசாங்கத்திடமிருந்து பண உதவி பெறும் எந்தப் பாடசாலையும் பிள்ளைகளிடமிருந்து சம்பளப்பணம் அறவிடமுடியாது.

இலங்கையில் எழுத வாசிக்கத் தெரிந்தோரின் தரத்தை நோக்கும்போது, ஆசியாக் கண்டத்தில் ஜப்பானுக்கடுத்தபடியில் நம்நாடு இருக்கின்றது. முழுக் குடிசனத் தொகை 6,700,000. இதில் 10 லட்சம் பிள்ளைகள் வரை 6,000 பாடசாலைகளில் கல்வி





விவசாயக் கிராமியச் சிறுவர் பாடசாலைக்குச் செல்லல்.

கற்று வருகின்றனர். கல்வித் துறையில் அரசாங்கம் செலவிடும் பணம் 1901 ம் ஆண்டில் 900,000 ரூபாவாக இருந்தது. இப்பொழுது ஏறக்குறைய பத்துக் கோடி ரூபாவாக அதிகரித்துவிட்டது. கிறிஸ்தவ, பௌத்த, இந்துமத ஸ்தாபன பாடசாலைகள் ஆரம்பக் கல்வியும் உயர்தரக் கல்வியும் அளிப்பதில் அதிக உதவி புரியலாயின. விஞ்ஞான சாத்திரம், கணிதம், பாஷை, சரித்திரம், வைத்தியம் எனும் துறைகளில் இலங்கைச் சர்வகலாசாலை பட்டங்கள் அளித்துவருகின்றது.

படித்தவர்கள் வேலையின்றித் திண்டாடும் பிரச்னை இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. இதனைத் தீர்த்தற்கு நன்கு ஆராய்ந்து முடிவு செய்யப்படும் ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டும். கைத்தொழில், வர்த்தகத் துறைகளில் பயிற்சியளிப்பதற்கான வசதிகள் அத்திட்டத்தில் இடம் பெறவேண்டும். மேலும் நம்நாட்டு இளைஞர் புதிய வேலைகளிலும் தொழில்களிலும் ஈடுபடுவதற்கான வசதிகளை உண்டாக்கிக் கொடுத்தலும் அத்தியாவசியம்.

அரசாங்க சேவையிலும் உத்தியோகங்களிலும் உள்ளவர்கள் தம் கடமையைத் திறம்பட ஆற்றிவருவதை நோக்குமிடத்து, இலங்கைப் பாடசாலைகளும் கல்லூரிகளும் சிறந்த கல்வியை யூட்டிவருகின்றன என்பது புலப்படும். இது பாராட்டுதற்குரிய தொன்று. கல்வியறிவுள்ள சிறு பான்மையினரே, எதிர்பார்த்த வாறு, அரசியல் துறை, பண்பாட்டு இயக்கம், சமுதாய சேவைகள், வர்த்தக ஸ்தாபனங்கள், இன்னோரன்னவற்றில் தலைவர்களாகக் காணப்படுகின்றனர். இவையெல்லாம் தவிர, பொதுசன சுகாதாரம் அதிக முன்னேற்றமடைந்துள்ளது. சின்னம்மை, கொலரா, பிளேக் முதலிய கொடிய தொற்று நோய்களை அகற்றுவதில் மாத்திரமன்றி, போஷணை, சுகாதாரம் என்னும் அடிப்படையான கொள்கைகளை ஆதாரமாகக்கொண்டு நோய் ஏற்படாமல் தடுப்பதிலும் போதிய முன்னேற்றம் காணப்படுகின்றது.

வைத்திய பொதுசன சுகாதார ஒழுங்கு முறையில் முன்னேற்றக் கொள்கைகளைக் கையாண்டமையால் அதிக பலன் ஏற்பட்டுள்ளது. சிசு மரணம் மிகவும் குறைந்துவிட்டது. மலேரியாச் சுரம் பரவுவதைத் தடுக்க எல்லா வகையான நடவடிக்கைகளும் கையாளப்படுகின்றன. இலங்கையில் 189 அரசினர் ஆஸ்பத்திரிகள் உண்டு. பன்னிரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விசேஷ சிகிச்சாசாலைகள் உண்டு. ஆனால் புதிய ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான டக்டர்மாரும் நேர்ஸ்மாரும் போதிய அளவு இல்லையென்றே சொல்லவேண்டும்.

சமுதாய சேவைகளை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்திவருகின்றது. சம்பளத்தீர்ப்புச் சங்கங்கள் நியமிக்கப்பட்டுள்ள தொழில்களில் அச் சங்கங்கள் அவ்வத்தொழில்களுக்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதத்தையும் வேலை செய்யும் நேரத்தையும் விதித்துள்ளன. ஏழைகள் கஷ்ட நிவாரணத்துக்காக அரசாங்கம் பெருந் தொகைப் பணம் ஒதுக்கியுள்ளது. மக்கள் நோயுற்ற காலத்தில் அல்லது வேலையற்றிருக்கும் காலத்தில் அவர்கட்கு வேண்டிய பாதுகாப்பு அளிப்பதற்கான ஓர் திட்டமும், " புரொவிடென்ற் பண்ட் " என ஆங்கிலத்தில் வழங்கப்படும் உதவிநிதி அமைப்பதற்கான ஒரு திட்டமும் ஒருங்கிணைத்து அமைக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.



பண்டைக்காலத்தில் உணவுப் பொருட்களை அபிவிருத்தி செய்வதே இலங்கையின் பிரதான விவசாயமாக இருந்து வந்தது. நீர்ப்பாசன சாதனங்களுக்கு இடையூறு ஏற்பட்டதாலும் படையெடுப்புகளும் உள்நாட்டுக் கலகங்களும் ஏற்பட்டதாலும் பயிர்ச்செய்கை கைவிடப்பட்டு இடைக்கிடை பஞ்சமும் ஏற்பட்டது. இப்படியான விக்கினங்கள் ஏற்பட்டும் உணவுப் பொருள் விஷயத்தில் இலங்கை சுயதேவையைப் பூர்த்திசெய்யப் போதிய உணவுப் பொருட்களை ஆக்கிவைத்திருந்தது எனலாம்.

நிலத்தைப் பராதீனப்படுத்தும் அதிகாரம் அரசனுக்கு இருந்த போதிலும் அவனும் சட்ட வரம்புக்குட்பட்டே கருமம் ஆற்றினான். மன்னர்கள் மானியமாக அளித்தமையாலும் நீண்ட கால ஆட்சியாலும் ஏற்பட்ட நில உரிமையை மாற்றமுடியாது. கிராமத்திலுள்ள காணி பங்குகளாக குடும்ப முறையில் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. ஒவ்வொரு கிராமமும் சுயதேவையைப் பூர்த்திசெய்யத் தேவையான உணவுப்பொருளை உற்பத்திசெய்து வந்ததுமன்றி, தன்தன் பரிபாலனத்தையும் நடத்தி வந்தது. பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டுப் பரிபாலன முறை அனுஷ்டானத்துக்கு வந்ததும் பழைய முறைகள் ஒவ்வொன்றாக அழிந்தொழிந்தன.

புதிய நிலைமைகளினால் நாட்டில் அதிக செழிப்பு ஒரு வகையில் ஏற்பட்டது என்பதிற் சந்தேகமில்லை. கோப்பி, தேயிலை, ரப்பர் தொழில்கள் அபிவிருத்தியடைந்து செல்வம் பெருகியது. அநேகருக்கு வேலையும் கிடைத்தது. அரசாங்க இறைப்பணமும் அதிகரித்தது. போக்குவரத்துச் சாதனங்கள் திருத்தம்பெற்றன. கல்விக்கும் சமுதாய சேவைக்கும் போதிய பணம் கிடைத்தது. ஆனால் கிராமப் பொருளாதார நிலை சீர்குலைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிற் கோப்பிக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டதனால் அதனை அதிகப்படியாகப் பயிரிட நிலம் தேவைப்பட்டது. விகற்பமான முறையில் நிலத்தைப் பராதீனப்படுத்தியதால் அநேக காடுகள் அழிக்கப்பட்டதுமன்றி, சில கிராமங்கள் முழுவதுமே அழிந்தொழிந்தன. கிராம விஸ்தீரணத்துக்குச் சாதாரணமாகத் தேவைப்படும் நிலத்தைத்தானும் விடவில்லை. மாடுகளுக்கு வேண்டிய மேய்ச்சல் நிலம்கூட விடப்படவில்லை. இத்தகைய மாற்றம்பற்றிக் கூறு



நாற்று நடுதல்.

பெற்றது. **1931** ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தல் சிறந்த அறிகுறியாகக் காணப்பட்டு டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படலாயிற்று.

ஆட்சியதிகாரம் உண்மையில் கையளிக்கப்பட்டிருந்தபோதிலும் புதிய ஆட்சி முறையிலுள்ள குறைகள் புலப்படத் தொடங்கின. கூட்டுப் பொறுப்பில்லாதபடியால், பொறுப்பு யாண்டுள்ள தென்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாகவிருந்தது. அரசியற் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்ட கட்சிமுறை இல்லாதிருந்த படியால், அரசாங்கக் கொள்கை இதுவென்பதைத் திட்டவட்டமாக வகுக்க முடியாதிருந்தது. இதனல் அரசாங்க சபையும் மந்திரி சபையும் தேசிய முக்கியத்வம் வாய்ந்த வேலைகளைச் செய்யமுடியவில்லை அல்லது செய்து நிறை வேற்றவில்லை யென முடிவுகட்டிவிடுவது சரியன்று. மேலும் பொறுப்பாட்சியை உண்மையில் அரசியற்திட்டமும் அளிக்கவில்லையென்றும் சொல்லிவிட முடியாது.

இத்திட்டத்தை நடைமுறையிற் கொண்டுவந்ததால் ஏற்பட்ட அநுபவத்தின் பயனக, பிரித்தானிய பாராளுமன்ற முறையைப் பின் பற்றியுள்ளதான ஓர் அரசியல் திட்டத்தை வகுத்தமைப்பதற்கு மந்திரிமார் முயன்றனர்.

சேர் அன்று கல்டிக்கற் இலங்கைத் தேசாதிபதியாக **1937** ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நியமிக்கப்பட்டபொழுது, இலங்கையில் உள்ள பல்வேறு வகைப்பட்ட அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் நன்கு அறிந்துகொள்ளக் காலம் வாய்த்த பின்னர், அரசியல் நிலைமையை நன்கு பரிசீலனை செய்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி குடியேற்ற நாட்டுக் காரியதரிசி தேசாதிபதியிடம் கூறி அனுப்பி வைத்தார். பரிபாலனத் திறமைவாய்ந்த புதிய தேசாதிபதியவர்கள் **1938** ம் ஆண்டு ஜூன் மாதம் அனுப்பிய அறிக்கையில், நிர்வாக சபை ஆட்சி முறையை ஒழித்து, அதற்குப் பதிலாகச் சாதாரண கபினெற்


முறையைச் சிபார்சு செய்தார். பிரதேசவாரிப் பிரதிநிதித்வம் இருக்க வேண்டுமெனவும் சிபார்சு செய்தார். இதற்கிடையில் யுத்தம் ஏற்பட்டதால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. **1943** ம் ஆண்டு மே மாதம் **26** ந் திகதி மன்னர் பிரானின் அரசாங்கம் ஒரு பிரகடனம் வெளியிட்டது. அதன் முதல் அம்சம் பின்வருமாறு :—

"யுத்தத்துக்குப் பின் இலங்கை அரசியல் அமைப்பைச் சீர் திருத்த வாக்களித்த மன்னர்பிரானின் அரசாங்கம் சிவில் ஆட்சி சம்பந்தமான பல விஷயங்களிலும் பூரண பொறுப் பாட்சியை இலங்கைக்கு அளிக்க முயலும்."



தூபாராம ஆலயம், அநுராதபுரம்.





கிரித்தலையிலுள்ள புராதன கற்படிகள்.

# சுதந்திர உதயம்


சிங்கள ராச்சியத்தில் ஒவ்வொரு கிராமச் சபையும் " ரட்ட சபா " எனப்படும் டிஸ்திறிக் சபைக்கு ஒரு பிரதிநிதியை யனுப்பி வந்தது. கிராமச் சபைக்கும் டிஸ்திறிக் சபைக்கும் மேலாக மந்திரிமாரையும் அரசனையும் கொண்ட மந்திராலோசனைச் சபை இருந்தது. அரசனே நீதி பரிபாலனப் பகுதிக்குத் தலைவனாக இருந்தான். பிரசைகளுக்கு மரணத்தண்டனை விதிக்கும் அதிகாரம் அரசனுக்கே இருந்தது.

இலங்கையைக் கைப்பற்றிய அந்நிய வல்லரசுகள் இந்நாட்டில் தொன்று தொட்டு நடைமுறையிலிருந்த அரசியல் முறைகளை அடிப்படையாகக் கொண்டு ஆளவில்லை. மிகவும் அண்மைக் காலம்வரை கிராமச் சங்கம் என்பது வெறும் பெயரளவில் மாத்திரமே இயங்கியது. டச்சுக் கிழக்கிந்திய கம்பெனியும், பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியும் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தில் அதிக நன்மையை எதிர்பார்த்திருந்திருக்க முடியாது. 1829 முடிக்குரிய குடியேற்ற நாட்டுப் பரிபாலனத்துக்கேற்றவாறு நல்லாட்சிபுரியும் சர்வாதிகாரம் 1802 ல் அமுலுக்கு வந்தது. ஆனால் ஆட்சியின் அநியாயங்களைப் பற்றி அநேக முறைப்பாடுகள் இருந்தன. 1829 ம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு றோயல் கமிஷனை அனுப்பியது. கோல்புறுக் கமிஷன் எனப்படும் இவ்விசாரணைச் சபை முக்கியமான பல சிபார்சுகளைச் செய்தது. சிவில் பரிபாலனத்தில் சாதி வேறுபாடுகளை ஒழித்தல், கல்வி அபிவிருத்தி, சிவில் சேவையில் இலங்கையர் இடம் வகித்தல், பத்திரிகைச் சுதந்திரத்தை ஊக்கிவிடுதல் என்பன இச்சிபார்சுகளுட் சிலவாகும். இச்சபையின்



விசாரணையால் ஏற்பட்ட மிகப் பிரதானமான அரசியல் அம்சங்கள் யாவையெனில், தேசாதிபதியின் செயல்களைக் கட்டுப்படுத்த ஒரு சட்ட நிர்வாக சபையும், பொது விஷயங்களை அலசி ஆராயவும் சட்டங்களை ஆக்கவும் ஒரு சட்ட நிரூபண சபையும் அமைக்கப்பட்டமையாகும்.

" இலங்கையின் அமைப்பையும் அதன் பண்பாட்டு நிலைமைகளையும் நோக்குமிடத்து, கீழைத் தேச டொமினியன்களில் ஐரோப்பிய நாகரிகத்தைப் பரப்புவதற்குச் சிறந்த மையமாக இலங்கை இருக்கிறது என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் நன்கு உணர்ந்தது. அங்கிருந்து பல தேசங்களுக்கும் நம் நாகரிகம் பரவும் என எதிர்பார்ப்பது அவ்வளவு பிழையாகாது " என்று விசாரணைச் சபையினர் குறிப்பிட்டனர்.




வயது வந்தோர்க்குக் கல்விப்பயிற்சி யளித்தல்

# அரசியற் சீர்திருத்தம்

மேற்காட்டியவாறு உறுதிமொழி அளிக்கப்பட்டிருந்த போதிலும் (இலங்கை அதிக முன்னேற்றமடைந்திருந்தபோதிலும்) 1833 ல் அளிக்கப்பெற்ற அரசியல் அமைப்பு முறை ஏறக்குறைய 80 வருஷகாலத்தில், எவ்வித மாற்றமுமின்றியே இருந்தது. இத்தகைய நிலைமைக்குக் காரணம் அரசியல் உணர்ச்சியுள்ள சிறுபான்மையினர் பெரும்பாலும் இங்குள்ள ஐரோப்பியராகவேயிருந்தமையேயாகும். மேலும், பொதுவாகக் கூறுமிடத்து, அவர்களுடைய நன்மைகளை, அவர்களுடைய சாதியத்தையும் இனத்தையும் சேர்ந்த மக்களை பிரதான உத்தியோகத்தர்களாயுள்ள அரசாங்கம் நன்கு கவனித்து வந்தது. அரசியல் அமைப்பிற் பிரதான சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வந்தது. பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற முறை முதன் முதலாக 1910 ல் உலோபித்தனமான முறையில் வேண்டா வெறுப்புடன் விட்டுக்கொடுக்கப்பட்டது. ஐரோப்பிய முறையிற் கல்வி கற்றவர்களின் பிரதிநிதியாக இலங்கையர் ஒருவரையும், 7,500 ஐரோப்பியர்கட்கு இரு அங்கத்தவரையும், 25,000 பறங்கியருக்கு ஒரு அங்கத்தவரையும் தேர்ந்தெடுக்க ஒழுங்கு செய்யப்பட்டது. சட்ட சபையின் ஏனைய அங்கத்தவர்கள் தேசாதிபதியால் நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப் பெற்றனர். முதலாவது உலகமகாயுத்த காலத்திலும் அதன் பின்னரும், சுய ஆட்சி முறையை வழங்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் பல கோரிக்கைகள் செய்யப்பட்டன. இதன் பயனாகச் சிறிது காலத்துள் அரசியற் சீர்திருத்தங்கள் பல அளிக்கப்பட்டன.





பிரதிநிதிகள் சபைக் கூட்டம்.

ஆரம்பத்தில் குடிசனத்தொகையில் வாக்காளர் இருக்கவில்லையெனினும் 100 க்கு ஆறு வீதத்துக்கு மேற்பட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால், தேசாதிபதியவர்கள் நல்லாட்சிபுரியும் சர்வாதிகாரியாக அமைந்துள்ள முடிக்குரிய குடியேற்ற நாட்டு ஆட்சிமுறை தேர்ந்தெடுக்கப்பட்டோரை அதிகப்படியாகக்கொண்ட இடத்தில் நற்பயன் அளிக்க முடியாதென்பது விரைவிற் புலனாயிற்று. எனவே டொனமூர் பிரபுவைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிஷன் 1927 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. ஒரு புதிய அரசியல் திட்டத்தை அமைக்க இந்தக் கமிஷன் செய்த சிபார்சுகள் பலவகையில் புரட்சிகரமானவையாக இருந்தன. வயது வந்தோர்க்கு வாக்குரிமையளித்தல், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையொழித்தல், எழு நிர்வாக சபைகள் ஆட்சி செய்தல் ஆதியன இந்தக் கமிஷன் செய்த சிபார்சுகளுட் சிலவாகும். அரசாங்க சபை தன் அங்கத்தவர்களிலிருந்து நிர்வாக சபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். நிர்வாகசபைத் தலைவர்களையும், குடியேற்ற நாட்டுக் காரியதரிசியால் நியமிக்கப்பெற்ற பிரதம காரியதரிசி, நிதிக்காரியதரிசி, சட்டக்காரியதரிசி எனப்படும் அதிகார உத்தியோகத்தர் மூவரையும் கொண்டது மந்திரிசபையாகும்.

எழு மந்திரி காரியாலயங்களும் பின்வருமாறு வகுக்கப்பட்டன :— உள்நாட்டு விஷயம், விவசாயமும் நிலமும், போக்குவரத்தும் பொது வேலையும், சுகாதாரம், தொழிலும் கைத்தொழிலும், ஸ்தல பரிபாலனம், கல்வி.

மந்திரிமார் நிதிவிஷயம் ஒன்றிலன்றி ஏனையபரிபாலனவிஷயங்களில் கூட்டுப்பொறுப்பு வகிக்கவில்லை என்றும் சொல்லலாம்.

கிழக்குத் தேசத்தில் வயது வந்தோர்க்கு வாக்குரிமையளித்தல் பரீட்சார்த்தமாக முதன் முதலாக இலங்கையில் நடை




# பொருளாதார வளம்

உணவுப் பயிர்களை—அவற்றிலும் விசேஷமாக நெற்பயிரை—இப்பொழுதிலும்பார்க்கக் கூடிய பிரதேசங்களில் விளைவிக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் இன்று ஈடுபட்டிருக்கிறது. இலங்கை தனக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் முழுவதையும் தானே ஆக்கித் தன் சுய தேவையைப் பூர்த்திசெய்து நற்பாதுகாப்புடன் இருந்த காலம் ஒன்றிருந்தது என்பது சரித்திர உண்மை. உள்நாட்டுக் கலகங்களாலும் அந்நியர் படையெடுப்புகளாலும் இத்தீவின் நீர்ப்பாசன சாதனங்கள் அழிந்து நாசமாயின. இதன் பயனாக மலேரியாச் சுரம் நாட்டிற் பரவலாயிற்று. இப்பொழுது இத்தீவின் மூன்றில் இரண்டு பாகம் திருத்தப்படாமற் கிடக்கின்றது. மேலும் நம் நாட்டுக்குத் தேவையான உணவின் அரைவாசிப் பங்கிற்கு மேற்பட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் சஞ்சல நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

ஏறக்குறைய பத்து லட்சம் ஏக்கர் நிலத்தில் இப்போது நெல் விளைவிக்கப்படுகின்றது. நெல்லை ஒழிந்த ஏனைய பிரதான பயிர்கள் தென்னை, ரப்பர், தேயிலை என்பனவாம். இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களில் 100 க்கு 90 விகிதமானவை பிற்கூறப்பட்ட மூன்று பொருட்களுமேயாம். தேயிலை உண்டாக்குவதில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக இலங்கை விளங்குகின்றது. தேயிலைத் தோட்டங்களுட் பெரும்பாலானவை கூட்டுப்பங்குக்கழக முறைப்படி பிரிட்டிஷ் முதலைக்கொண்டு நடத்தப்படுகின்றன. 54,000 க்குக் குறையாத சிறு தோட்டங்களுமுண்டு.

ரப்பர் உண்டாக்குவதில் மலாயா, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் என்பவற்றுக்கு அடுத்தபடியாக இலங்கை மூன்றாவது ஸ்தானம் வகிக்கின்றது. ரப்பர் மரம் பயிரிடப்பட்டுள்ள இடப்பரப்பு இப்போது 605,000 ஏக்கர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதில் பிரிட்டிஷ் முதலைக்கொண்டு நடைபெறும் ரப்பர் தோட்டங்



துவார பாலகர்.

களின் தொகை 100 க்கு 45 சதவீதமெனலாம். பெருந் தோட்டங்களைவிட, 90,000 சொந்தக்காரர்களுக்குரிய 140,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள சிறு றப்பர் தோட்டங்களுமுண்டு.

இலங்கையின் பொருள்களை வாங்குவதிலும் இலங்கைக்கு வேண்டிய பொருள்களை அனுப்பி விற்பதிலும் ஏனைய நாடுகளிலும்பார்க்க இங்கிலாந்தே அதிக பங்குபெற்று வருகிறது. 1948 ம் ஆண்டில் பிரித்தானியாவுக்கு 30 கோடியே 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை இலங்கை ஏற்றுமதிசெய்து அங்கிருந்து 17 கோடியே 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வாங்கியது. அதே வருடத்தில் 1 கோடியே 90 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை இந்தியாவுக்கு விற்று, அங்கிருந்து 12 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வாங்கியது.

இலங்கையின் கைத்தொழில் வளம் இன்னும் முற்றாகப் பயன்படுத்தப்படவில்லை. நீரியல் மின்சாரத் திட்டம் ஒன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டிருக்கிறது. சீமெந்து உற்பத்திக்கான முயற்சிகளும் துரிதமாக நடைபெறுகின்றன. இன்னும் வேறு பிரதான கைத்தொழில் சம்பந்தமான திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டு, பொருத்திய வேலைகள் நடைபெறுகின்றன. காரீயம் பெருந்தொகையாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அந்நிய தேசங்களில் விற்பனையாதற்குரிய முறையில் தேங்காய் எண்ணெயும் தேங்காய்த்துருவலும் தயாரிக்கப்படுகின்றன.

பண்டைக்காலம் தொடக்கமாக இரத்தினக் கற்கள் இலங்கையிலிருந்து பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. உலகத்தில் மிகச் சிறந்தனவாகக் கருதப்படும் நீலக்கற்கள், வைடூரியம், மாணிக்கம், பகாலுசிலே கற்கள் இலங்கையிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன. பச்சைப்படியன, சலவா, சேர்க்கன், தோரமல்லி, செவ்வந்திக்கல், பூனைக்கல் முதலிய பல்வேறு இரத்தினக்கற்களும் இலங்கையிற் காணப்படும்.

பலவகையாலும் கிடைத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்துள்ளது என்பதற்கையமில்லை. 1811 ம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமதி 20 லட்சம் ரூபா. ஆனால் 1948 ம் ஆண்டில் அது 93 கோடியே 70 லட்சம் ரூபாவாக அதிகரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.



றப்பர் பால் வெட்டல்.

# கபினெற் முறை

ஒரு அரசியலமைப்பை வகுக்கும்படியும் அவ்வமைப்பை ஒரு கமிஷன் அல்லது மகா நாடு பரிசீலனை செய்யும் எனவும் குடியேற்ற நாட்டு மந்திரி மந்திரிமாரைக் கேட்டுக் கொண்டார். சோல்பரி பிரபுவைத் தலைவராகக்கொண்ட கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதை மன்னர்பிரான் அரசாங்கம் 1944 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் பிரகடனம் செய்தது. இந்தக் கமிஷனில் சேர் பிரெடரிக் ரிஸ், (பின்னர் வங்காள கவர்னராக் நியமிக்கப்பெற்ற) சேர் பிரடரிக் பரோஸ் என்பவர்கள் அங்கத்தவர்களாக இருந்தார்கள். குடியேற்ற நாட்டுக் காரியாலயத்து திரு. ரலோட் சிமித் இந்தக் கமிஷனுக்கு காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். 1944 ம் ஆண்டு டிசெம்பர் மாதந் தொடக்கம் 1945 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை இந்தக் கமிஷன் இலங்கையில் பல இடங்களையும் தரிசித்து 1945 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ந் திகதி தனது அறிக்கையை வெளியிட்டது. குடியேற்ற நாட்டு மந்திரி இலங்கை அரசாங்க சபைத் தலைவர் திரு. டி. எஸ். சேனநாயக அவர்களுடன் கலந்து ஆலோசிப்பதற்காக அவர்களை லண்டனுக்கு அழைத்தார். அச்சமயம் சிறுபான்மைக் கட்சியினர் சமர்ப்பித்த பலவகைக் கோரிக்கைகளும் குடியேற்றநாட்டு மந்திரிவசம் இருந்தன.

ஒக்ரோபர் மாதம் 31 ந் திகதி, மன்னர்பிரான் அரசாங்கம் தனது முடிவுகளைப் பிரசுரித்தது. சோல்பரி கமிஷன் தயாரித்த திட்டத்தைப் பெரும்பாலும் கொண்ட ஓர் அரசியல் அமைப்புத் திட்டமே இலங்கை அரசியல் முன்னேற்றத்திற் கேற்றதென்ற முடிவுக்கு வந்தது. சோல்பரி திட்டத்தில் மேற்சபையைப்பற்றிய திட்டம் தவிர, இலங்கை மந்திரிமார் வகுத்த அரசியல் திட்டமும் இதுவும் பெரும்பாலும் ஒத்திருந்தன. இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றம் வகுக்கப்பட்டது. பிரதேசவாரிப்பிரதிநிதித்துவத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 95 அங்கத்தவர்களையும் தேசாதிபதி நியமித்த ஆறு அங்கத்தவர்களையும் கொண்ட கீழ்ச்சபை ஒன்று; கீழ்ச்சபை அங்கத்தவர்களால் தெரிந்தெடுக்

கப்பட்ட 15 அங்கத்தவர்களையும், தேசாதிபதி தமது விருப்பத்தின் படி நியமித்த 15 அங்கத்தவர்களையும் அதாவது எல்லாமாக 30 அங்கத்தவர்களைக்கொண்ட செனற் சபை எனப்படும் மேற்சபை மற்றொன்று. சிறுபான்மை வகுப்பினரின் நன்மைகளைப் பாதுகாக்கும் நோக்கமாக, குறித்த சில மசோதாக்களுக்கு அதிகாரம் கொடுக்கும் தத்துவம் தேசாதிபதியவர்களுக்கு அளிக்கப்பட்டது.

1945 ம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ந் திகதி, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெள்ளை அறிக்கைக்குச் சாதகமான தீர்மானமொன்று அதிகப்படியான வாக்குகள் பெற்று இலங்கை அரசாங்க சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



கல்லோயா, இங்கினியாகல



# கபினெற் ஆட்சிமுறை

1946 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி இராசசபைச் சட்டப் பிரகாரம் ஒரு புதிய அரசியல் திட்டம் நிரூபிக்கப்பட்டது. பிரதிநிதிகள்சபைத் தேர்தல்கள் 1947 ம் ஆண்டு ஒகஸ்ற்—செப்ரெம்பர் மாதங்களில் நடைபெற்றன. ஆனால் 1947 ம் ஆண்டு ஜூன் மாதம் 18 ந் திகதியன்று குடியேற்றநாட்டு மந்திரி, அதி கௌரவ. ஏ. கிறீச் ஜோன்ஸ் பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை வெளியிட்டார். தேர்தல் முடிந்து, புதிய அரசாங்கம் நிறுவப்பட்டதும், பிரித்தானிய சாம்ராச்சிய நாடுகளுள் பூரண பொறுப்புவாய்ந்த அந்தஸ்தை இலங்கைக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் சொன்னார்.

நாட்டுக்குச் சுயாட்சி பெறுவதில் பெரிதும் உழைத்த திரு. எஸ். சேனநாயக அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகப் பொதுத் தேர்தலில் ஈடுபட்டார். தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 95 அங்கத்தவர்களுள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 42 அபேட்சகர்கள் தேர்தலில் வெற்றி பெற்றனர். மூன்று இடதுசாரிக் கட்சிகளும் சில ஸ்தானங்களைக் கைப்பற்றின. டக்டர் என். எம். பெரேராவைத் தலைவராகக்கொண்ட லங்கா சமசமாஜக் கட்சி 10 இடங்களைப் பெற்றது. திரு. பீற்றர் கெனமன் அவர்களைத் தலைவராகக்கொண்ட பொதுவுடைமைக் கட்சி 5 இடங்களைப் பெற்றது. டக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களைத் தலைவராகக் கொண்ட பொல்ஷிவிக்—லெனிஸ்ற் கட்சி (இப்பொழுது பொல்ஷிவிக் சமசமாஜக் கட்சி என்றழைக்கப்படுகிறது) 5 இடங்களைப் பெற்றது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆறு இடங்களைப் பெற்றது. 19 பேர் இக் கட்சிகளைச் சேராது தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களைப் பிரதிநிதிகளாகக் கொள்ளாத சிறுபான்மையினரின் பிரதிநிதிகளாக ஆறு நியமன அங்கத்தவர்கள் கவர்னர் ஜெனரல் அவர்களால் நியமிக்கப் பெற்றனர்.



1947 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ந் திகதி, பாராளுமன்றம் கூடியபோது, பிரதம மந்திரி ஏற்கெனவே தமது கபினெற் சபையைத் தெரிந்து எடுத்திருந்தார். கபினெற் சபை பின்வருமாறு :—திரு. டி. எஸ். சேனநாயக, பிரதம மந்திரியும் பாதுகாப்பு வெளிநாட்டு விஷய மந்திரியும்; திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக, சுகாதார ஸ்தல ஸ்தாபன மந்திரியும் சபை முதல்வரும்; கேணல். ஜே. எல். கொத்தலாவெல, போக்கு வரத்து மந்திரி; சேர். ஒலிவர். குணத்திலக்க, உள்நாட்டு விஷய, கிராமாபிவிருத்தி மந்திரி; திரு. ஜே. ஆர். ஜயவர்தன, நிதி மந்திரி; திரு. ஜோர்ச் ஈ. டி. சில்வா, கைத்தொழில், மீன்பிடித்தொழில் மந்திரி; திரு. சி. சுந்தரலிங்கம், வர்த்தக வியாபார மந்திரி; திரு. ரி. பி. ஜாயா, தொழில், சமூகசேவை மந்திரி; திரு. ஈ. ஏ. நுகவெல, கல்வி மந்திரி; திரு. ஏ. ரத்நாயக, உணவு, கூட்டுறவு மந்திரி; திரு. டட்லி. சேனநாயக, விவசாய, நில மந்திரி; திரு. சி. சிற்றம்பலம் தபால் தந்தி மந்திரி; திரு. ஆர். எஸ். எஸ். குணவர்தன, இலாகா இல்லாத மந்திரியும், அரசாங்கக் கொறடும்; அரசியல் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டவாறு அமைக்கப்பெற்ற செனெற் சபையில் சேர். ஒலிவர் குணத்திலக்க அவர்களும், டக்டர் எல். ஏ. ராஜபக்ஸ அவர்களும் நியமன அங்கத்தவர்களாக இடம்பெற்றனர்.

தேர்தல் பெட்டிசங்களின் பலனாக திரு. ஜோர்ஜ் ஈ. டி. சில்வா அவர்களும் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்தன அவர்களும் தங்கள் ஸ்தானங்களை இழந்தனர். சிறிது காலத்தின் பின்னர் சேர். ஒலிவர் குணத்திலக்க அவர்கள் லண்டனில் ஹை கமிஷனராக நியமிக்கப்பட்டார். இம் மூவருடைய ஸ்தானங்களுக்கு திரு. ஈ. ஏ. பி. விஜயரத்ன அவர்கள் உள்நாட்டு விஷய கிராமாபிவிருத்தி மந்திரியாகவும், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் கைத்தொழில், மீன்பிடித் தொழில் மந்திரியாகவும், திரு. ஏ. ஈ. குணசிங்க அவர்கள் இலாகா இல்லாத மந்திரியாகவும் நியமிக்கப் பெற்றனர். வர்த்தக, வியாபார மந்திரி திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் 1948 ம் ஆம் டிசம்பர் மாதம் தமது பதவியை இராஜினாமாச் செய்தார். அவருடைய இடத்துக்கு திரு. எச். டபிள்யு. அமரசூரிய நியமிக்கப்பட்டார். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் கபினெற் சபையில் சேர்க்கப்பட்டமை அரசியல் முக்கியத்துவமுள்ள ஒரு சம்பவமாகும்.

மிகச் சாதுரியம் வாய்ந்த ஒரு பாராளுமன்ற அங்கத்தவரை யும் அவருடன் சேர்ந்த அங்கத்தவர்களையும் எதிர்க் கட்சி யினர் இழக்கலாயினர்.



றம்பொட எல்ல நீர் வீழ்ச்சி



# புதிய டொமினியன்

**1947** ம் ஆண்டு நவம்பர் மாதம் பிரித்தானிய பாராளுமன்றம் இலங்கைச் சுதந்திரச் சட்டத்தை நிறைவேற்றியது. மன்னர் பிரானின் அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் பாதுகாப்பு வெளிநாட்டு விஷயங்கள், அரசாங்க சேவைகள் என்னுமிவை பற்றி உடன்படிக்கையொன்று செய்துகொண்டன. இச்சட்டம் **1948** ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 4ந் திகதி அமுலுக் குக் கொண்டுவரப்பட்டது. பிரித்தானிய பொதுநல அமைப்பின் ஒரு டொமினியனுக இலங்கை விளங்கியது.


தேசாதிபதி ஸேர். ஹென்றி மூர் அவர்கள் அதே நாளில் கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்று விசுவாசப் பிரமாணமும் செய்துகொண்டார். பொதுமக்கள் களிப்புற, பெப்ருவரி மாதம் **10** ந் திகதி இலங்கையில் டொமினியன் பாராளுமன்றம் கிளொஸ்ரர் கோமகனுல் திறந்து வைக்கப்பட்டது. அவ்வமையம் கிளொஸ்ரர் கோமகளும் பிரசன்னமாயிருந்தார். இதற்கென விசேஷமாக அமைக்கப்பெற்ற அத்தாணி மண்டபத்தில் இவ் வைபவம் சிறப்பாக நடைபெற்றது. திறப்புவிழா வைபவத்தின் பின்னர் பிரதம மந்திரியவர்கள் சிங்கக் கொடியை ஆரோ கணஞ்செய்து வைத்தார்கள்.

**1948** ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் லண்டனில் நடைபெற்ற சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் இலங்கைப் பிரதம மந்திரி யும் கலந்துகொண்டார். இந்திய, பாகிஸ்தான், இலங்கைப் பிரதமர்கள் முதன் முறையாக இம்மகாநாட்டிற் கலந்து கொண்டனர்.


இலங்கை பலவகையிலும் அதிர்ஷ்டம் வாய்ந்த ஒரு நாடு எனலாம். புராதன நாகரிகமும் இடையீடில்லாத சரித்திரப் பெருமையும் பொருந்தியது. பண்டைப் புகழுடன் விளங்கிய அநுராதபுரம், பொலநறுவை ஆதியாம் புராதன நகரங்களில் சிலமுற்றுக்கிடக்கும் கட்டடங்கள், ஞாபகசின்னங்கள் முதலியன அந்நகரங்களின் புராதன நாகரிகத்தை எடுத்துக்காட்டி ஞாபக மூட்டுகின்றன. அறிவு மிக்க அரசர்களினதும் பௌத்த பிக்கு



4—J. N. A 90440 (8/50)



மலைப்பிரதேச வயல் நிலம்.





சந்திரவடிவக் கற்படி

களினதும் அளப்பருஞ் செயல்களைப்பற்றி மகாவம்சம் நன்கு விவரித்துக் கூறியுள்ளது. இலங்கை மக்கள் மீது பௌத்த சமயத்துக்கிருந்த செல்வாக்கினைப் பழைய தேவாலயங்களும் இலக்கியமும் நன்கு வற்புறுத்துகின்றன. வளம் மிக்க நிலம், சுவாத்தியத்துக்கேற்ற காலநிலை, வனப்பு மிக்க இயற்கைத் தோற்றம் யாவும் இலங்கைக்குச் சிறப்பை யளிக்கின்றன. ஏனைய நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழக வாயிலாக அமைந்து விருத்தியடைந்துவரும் ஆகாய விமானப் பாதையிலும் கடற் பிரயாணப் பாதையிலும் இலங்கை அமைந்திருப்பதால், அது ஒரு வகையில் கேந்திர ஸ்தானத்தில் இருக்கின்றதெனலாம். நூற்றைம்பது வருடம் வரை இலங்கை சமாதானத்தை அநுபவித்து, கத்தியின்றி யுத்தமின்றி, ஒரு சொட்டு இரத்தம் சிந்தாது சுதந்திரத்தை ஈட்டிக்கொண்டது. பிரித்தானிய பொதுநல அமைப்பில் பூரணமான சம அந்தஸ்து பெற்ற நாடாக இலங்கை அங்கத்துவம் வகிக்குமாறு வரவேற்கப்பட்ட பொழுது, ஆறும் ஜோர்ஜ் மன்னர்பிரான் அனுப்பிய செய்தியை அவருடைய சகோதரன் கிளாஸ்ரர் கோமகன் வாசித்தார்.

"சுதந்திர மக்களைக்கொண்ட இந்தப் பொதுநல அமைப்பு மகா நாட்டுடன் இலங்கை மக்கள் பூரணமாக ஒத்துழைப் பார்கள் என்றும் இப்புதிய பொறுப்பை நீங்கள் செவ்வனே நிறைவேற்றி வைப்பீர்கள் என்றும் நான் பூரணமாக நம்புகிறேன். இச் சுபதினத்தில் எனது ஆசியைக் கூறுகிறேன். சமாதானத்தையும் ஐசுவரியத்தை யும் இலங்கை என்ஞான்றும் அநுபவிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். எதிர்காலத்தில் உங்கள் நாடு நல் வழியிற் செல்ல உங்களுக்கு வழிகாட்டுமாறு இறைவன் அருள்புரிவராக." என்று அச்செய்தியிற் கூறப்பட்டிருந்தது.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக



யாலே வனம்




# சுதந்திர இலங்கை

1948 ம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றதும், மக்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவு, உடை, வீடு சம் பந்தமாக இலங்கை சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாடாகத் திகழச் செய்வதில் அரசாங்கம் கவனஞ் செலுத்தி வரத் தொடங்கியது. நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்க இலங்கை அரசாங்கம் பாரிய திட்டங்களை வகுத்தது. 1947–48 நிதிவருடம் தொடக்கம் 1952–53 நிதிவருடம்வரை யுள்ள ஆறுவருடத் திட்டத்தை அரசாங்கம் தயாரித்தது.

நாட்டுக்கு அவசியம் தேவையான உணவுப் பொருட்களை விளைவிப்பதற்கான விவசாய அபிவிருத்தியை இருமுறையில் அடையலாம். ஈரலிப்பான பிரதேசத்தில் உணவுப் பயிர்ச் செய்கைக்காக இதுவரை பண்படுத்தப்பட்ட தரையில் அமோக மாகவும் சாஸ்திர முறைப்படியாகவும் சாகுபடி செய்தற்கென அரசாங்கம் ஓர் இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறது. இது ஒரு வழி. மற்ற வழி யாதெனில், வரண்ட பிரதேசத்தில் இருக் கின்றனவும், இன்னும் செய்கைப்பண்ணப்படாதனவும், ஆனால் செய்கைப்பண்ணக் கூடியனவுமாய நிலப்பரப்புக்களைப் பண்படுத்த ஒழுங்கு செய்தலாகும். இவ்வித முயற்சிகளை இலங் கை அரசாங்கம் கையாண்டு வருவதால் நெல் முதலிய தானிய வகைகள் கூடுதலாக விளைவு செய்யப்பட்டு வருகின்றன.

பாரிய நீர்ப்பாசன வேலை, குளக்கட்டு வேலை முதலியன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில பூர்த்தியாகிவிட்டன. பாரிய நீர் பாசனத்திட்டத்தின் பிரகாரம் குடியேற்றத்தைத் துரிதமாக நிறைவேற்றுவதில் ஆறுவருடத் திட்டம் உதவிபுரிந்து வரு கின்றது. கிரித்தலே, பராக்கிரம சமுத்திரம், எலாஹெர, மின் னேரி, காகமை, நுவரவெவ, பத்மெடில, மினிப்பே, ரிதிபெந்தி எல, தேவாஹூவ, இரணைமடு, உன்னிச்சை, கொட்டுக்கச்சி, உரியாவ, மகா உஸ்வெவ, மகா கும்புக்கடவெல என்னுமின் னோரன்ன திட்டங்களின்படி விவசாயிகள் குடியேறுதற்கான வேலைகள் தீவிரமாக நடைபெற்று, சிற்சில இடங்களில் குடியேற் றம் செவ்வனே நடந்தேறி நற்பயனை அளிக்கத்தொடங்கிவிட்டது.



தோட்டங்களில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தோட்டத்துப் பிள்ளைப் பராமரிப்பு நிலையத்தில் விட்டுச்

விவசாயப் பொருட்களை விற்பனை செய்வதற்கேற்ற வசதிகளை விற்பனை வசதி இலாகா செய்து வருகின்றது. இந்த ஒழுங்கினால் தரகர்கள் கொள்ளை லாபம் அடிப்பது குறைந்து வருகின்றது. இந்த இலாகா அநேக நெல்லுக்குத்தும் யந்திரங்களை நிறுவி நடத்தி வருகின்றது. காய்கறிகளை விற்பதற்கும் ஏற்ற ஒழுங்கு செய்துள்ளது. அநேக பழங்களைத் தகரத்தில் அடைத்து விற்பனை செய்வதிலும், ஆஸ்பத்திரிகளுக்கு உணவுப் பொருட்கள் அளிப்பதிலும் இந்த இலாகா ஈடுபட்டு உழைத்து வருகின்றது. உள்நாட்டுப் பொருட்களை விற்பதற்குக் கடைகள் வைத்து நடத்தியும் வருகின்றது.

கைத்தொழில் துறையிலும், அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் திட்டம் மேற்கூறிய ஆறுவருடத் திட்டத்தில் அடங்கியுள்ளது. இதன் பொருட்டுத் தற்போதுள்ள தொழிற்சாலைகள் இக்கால முறைக்கேற்ப திருத்தியமைக்கப்பட்டுள்ளன. மேலும் புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. காங்கேயன்துறையிலுள்ள சிமெந்து தொழிற்சாலை சிமெந்து உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டது. இதுவரை சிமெந்திற்காக அந்நிய நாட்டுக்கு அள்ளி இறைத்த அளவற்ற பணம் நம் நாட்டிற்கே பயன்படும். கடதாசித் தொழிற்சாலை, எண்ணெய் ஆலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். கண்ணாடி, பீங்கான், ஓட்டுப்பலகை ஆகியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன.

மீன்பிடித் தொழில் செவ்வனே நடைபெறுவதற்காகக் கடற்றொழில் கைத்தொழில் மந்திரி காரியாலயம் பல முன்னேற்றமான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. சனங்கள் நல்ல மீனை மலிவாக வாங்கும்பொருட்டு பல நடவடிக்கைகள் கையாளப்பட்டு வருகின்றன. குடிசைக் கைத்தொழில் இயக்கம் இந்நாட்டின் பெருங் கைத்தொழில் அபிவிருத்தியுடன் முன்னேறிச் செல்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுச் சிறந்த தொண்டாற்றி வருகின்றது.

வியாபாரத் துறையிலும் இதுவரை அந்நியர் வசமிருந்த வியாபாரத் தொழிலை இலங்கையர் வசம் ஒப்படைக்கும் நோக்கமாக, அதற்குரிய வழிவகைகள் கையாளப்பட்டு வருகின்றன.

சுதந்திர இலங்கையில் போக்குவரத்துச் சேவைகள் பல வகையிலும் அபிவிருத்தி அடைந்துள்ளன. பல தூர நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையே ஆகாய விமானப் போக்குவரவு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரைவாகச் செல்வதற்கான உள்நாட்டுச் சேவையொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுகத்தைத் தற்கால முறைக்கேற்ற சிறந்த துறைமுகமாகத் திருத்தியமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டு, கட்டிட வேலை ஆரம்பமாகிவிட்டது. லக்ஸபானையிலுள்ள நீர்மின்சாரத் திட்டத்தின்படி இவ்வாண்டில் கூடுதலான மின்சாரம் இலங்கை மக்களின் உபயோகத்துக்குக் கிடைக்கக்கூடியதாகவிருக்கும்.

தபால் தந்தி போக்குவரவுச் சேவைகள் படிப்படியாகவும் துரிதமாகவும் விஸ்தரிக்கப்படுகின்றன. தூர இடங்களில் தபாற் கந்தோர்கள் திறக்கப்படுகின்றன. ரேடியோ சிலோன் எனப்படும் இலங்கை வானொலி நிலையம் ஏனைய நாகரிக நாடுகளிலுள்ள வானொலி நிலையங்களுக்கு இணையானதென்று சொல்லக்கூடிய முறையில் அமைந்து அருஞ்சேவை செய்து வருகின்றது. கிராமவாசிகளும் இச்சேவையினால் பயன் பெறுதற்கேற்ற ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

கிராமாபிவிருத்தியைக் கவனித்து வருவதற்காக அதற்கென ஓர் இலாகா நிறுவப்பட்டு, சிறந்த தொண்டாற்றி வருகின்றது. கிராம சேமாபிவிருத்திச் சபைகள் மூலம் கிராமங்களைப் பல துறைகளிலும் அபிவிருத்தியடையச் செய்வதில் இந்த இலாகா முயன்று வருகின்றது.

தற்போதைய பொலீஸ் படை இன்னுஞ் சிறந்த சேவை செய்துவர வேண்டுமென்ற நோக்குடன் அரசாங்கம் அநேக சீர்திருத்தங்களைச் செய்து வருகின்றது.

நீதிமந்திரி காரியாலயம் நீதிஸ்தலங்களைத் திருத்தியமைத்து நீதிபரிபாலனம் செவ்வனே நடைபெறுவதற்கு ஆவன செய்து வருகின்றது.

இலங்கைத் தேசிய சேமிப்பு இயக்கம் சுதந்திர இலங்கையிற் குறிப்பிடத்தக்க தொண்டாற்றி வருகின்றது.

சுதந்திர இலங்கை பொருள்வளம் மிக்க நாடாகத் திகழச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் பல்லாற்றானும் முயன்று வருகின்றதென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். மத்திய வங்கி ஸ்தாபிதமாகி, கருமம் ஆற்றிவருகின்றது.




வைத்திய சுகாதாரத் துறையில் இலங்கை முன் எப்பொழுதுமில்லாத முன்னேற்றம் பெற்று வருகிறது. இப்பொழுதுள்ள ஆஸ்பத்திரிகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. புதிய ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டு வருகின்றன. எக்ஸ்-றே முதலிய நவீன விஞ்ஞானக் கருவிகளின் உபயோகத்தைச் சனங்கள் பெறக்கூடியதாக இருக்கிறது. பிறதேசங்களில் உள்ள வைத்திய நிபுணர்களின் சேவை நமக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. நம் நாட்டு வைத்தியர்கள் பிறதேசங்கட்கு அனுப்பப்பட்டு விசேஷ பயிற்சி பெற்று வருகிறார்கள். மலேரியாவை முழுதும் அழித்து விட்டார்கள் என்று சொல்லக்கூடிய விதம் மலேரியா எதிர்ப்பு வேலை நடைபெற்று வருகிறது. க்ஷயம் முதலான நோய்களையும் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுருங்கச் சொன்னால் மக்கள் எல்லாரும் சுகமாக வாழத்தக்கதாக அரசாங்கம் செய்யக்கூடிய யாவற்றையும் செய்து கொண்டு வருகிறதென்றே சொல்ல வேண்டும்.

ஸ்தல ஸ்தாபன ஆட்சியும் இலங்கையில் இப்பொழுது நன்கு முன்னேறியிருக்கிறது. மாநகர சங்கங்கள், நகரசங்கங்கள், பட்டின சங்கங்கள் பல புதிதாக நிறுவப்பட்டிருக்கின்றன. ஸ்தல ஸ்தாபனங்கள் மூலம் அரசாங்கம் பல புதிய வீடுகளைக் கட்டி மக்கட்கு அளித்து வருகின்றது. இவ்வகையான புதிய வீடு அமைத்தல் திட்டங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள கரையூர் வீடமைப்புத் திட்டம் குறிப்பிடுதற்குரியது. மத்திய அரசாங்கம் வீடு கட்டுவதற்கு கடன் உதவும் திட்டம் ஒன்றை அங்கீகரித்திருக்கிறது. அரசாங்க உத்தியோகஸ்தருக்கும் பொலிஸாருக்கும் மாடி வீடுகளைக் கட்டி குறைந்த வாடகைக்கு கொடுத்து இருக்கிறது. தண்ணீர் குறைவான இடங்களில் தண்ணீர் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கையில் உள்ள இலவசக் கல்வித் திட்டத்தைச் செவ்வையாக நடத்த ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆசிரியர்களைப் பயிற்றுவதற்காகப் பல புதிய ஆசிரிய கல்லூரிகள் நிறுவப்பட்டு வருகின்றன. கொழும்பில் முன்னர் இருந்த ஆங்கில ஆசிரிய கல்லூரி மஹாரகமைக்கு மாற்றப்பட்டு பன்னூற்றுக் கணக்கான ஆசிரியர்கட்குப் பயிற்சி அளித்து வருகின்றது. நாடெங்கும் வலைப்பின்னல் போல் பாடசாலைகள் திறக்கப்பட்டு வருகின்றன. பரீட்சைப் பகுதியை ஒரு தனி இலாகாவாக நடத்தத் திட்டம் இடப்பட்டிருக்கிறது.



5——J. N. A 99440 (8/60)




திருக்கேதீச்சரம்.

# ஈழநாட்டு ஸ்தலங்கள்


**திருக்கதிர்காமம் :** இது தென்னிலங்கையிலுள்ள புராதன முருக ஸ்தலம். கொழும்பிலிருந்து புகையிரத மார்க்கமாக மாத்தறைக்குச் சென்று, அங்கிருந்து பஸ் வண்டி மார்க்கமாக கதிர்காம ஸ்தலத்தை யடையலாம். கொழும்பிலிருந்து நேரே மோட்டார் வண்டி மூலமாகவும் செல்லலாம். அருணகிரி நாதரால் திருப்புகழ்ப்பாமாலை சூட்டப்பெற்ற ஸ்தலம். கதிர்காமநாதன் ஆலயத்துக்கு அருகில் மாணிக்க கங்கையெனும் புனித நதி ஓடுகின்றது. பௌத்த அரசர்களும் இந்து மன்னர்களும் இவ் வாலயத்தை ஆதரித்து வந்தனர். இவ்வால யத்திற் பூசை செய்வோர் கப்புராளைமார் எனப் படுவர். இங்கு நடைபெறும் பூசை முறை ஏனைய இந்து ஆலயங்களில் நடைபெறும் பூசை முறைக்கு வேறுபட்டது. ஆடிமாதத்தில் நடை பெறும் விழாவில் பல்லாயிரக்கணக்கான இந்துக் களும் பௌத்தர்களும் கலந்து கொள்வர். யாத் ரீகர்கள் தங்குவதற்கு வசதியான மடங்கள் உண்டு.

**செல்லக்கதிர்காமம் :** கதிர்காமத்திலிருந்து 3 கல் தொலைவில் செல்லக்கதிர்காமம் எனும் ஸ்தலமுண்டு. கதிர்காமத்தி லிருந்து 4 கல் தொலைவில் கதிரைமலை யெனும் ஸ்தலமுண்டு.

**திருக்கேதீச்சரம் :** ஈழ நாட்டிலுள்ள பாடல் பெற்ற இரு ஸ்தலங் களுள் ஒன்று. கொழும்பிலிருந்து தலைமன்னா ருக்குச் செல்லும் புகையிரதப் பாதையில் மன்னார் என்றொரு புகையிரத ஸ்தானம் உண்டு. இதில் இருந்து 6 கல் தொலைவிலுள்ள மாதோட்ட நகரில் இப் புராதன ஆலயம் உண்டு. சம்பந்த சுவாமிகளாலும் சுந்தர மூர்த்தி சுவாமிகளாலும் தேவாரம் பாடி



திருக்கேதீச்சரம்.



திருக்கோணமலை.

யருளப் பெற்ற புனித ஸ்தலம். பாலாவியென்னும் தீர்த்த விசேடம் வாய்க்கப்பெற்ற தலம். சோழவரசர்களும் யாழ்ப்பாணத்தரசர்களும் இதனை ஆதரித்து வந்தனர். இது போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது. இவ்வாலயம் இருந்த இடத்தைச் சைவர்கள் விலைக்கு வாங்கி அதில் ஒரு சிறு ஆலயம் அமைத்தனர். கும்பாபிஷேகம் 1910 ம் ஆண்டில் நடைபெற்றது. புராதனப் பெருமை வாய்ந்த இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் திருப்பணியைத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையினர் ஆரம்பித்துள்ளனர்.

**திருக்கோணமலை :** கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திருக்கோணமலையிலுள்ள புராதன க்ஷேத்திரம். சம்பந்த சுவாமிகளால் தேவாரம் பாடியருளப்பெற்ற புனித ஸ்தலம். இது தென்கைலாயம், சுவாமிமலை, திரிகோணமலை எனவும் கூறப்படும். திரிகோணமலை சிறந்த துறைமுகம். புகையிரத ஸ்தானமும் உண்டு. குளக்கோட்டன் என்னும் சோழவரச குமாரன் இக்கோயிலைக் கட்டினன் எனக் கூறப்படுகின்றது. சோழ, பாண்டிய அரசர்களும், யாழ்ப்பாணத்தரசர்களும் இக்கோயிலை ஆதரித்து வந்தனர். இவ்வாலயம் போர்த்துகீசரால் அழிக்கப்பட்டது. ஆலயம் இருந்த இடத்துக்கு இப்பொழுது பூசை செய்யப்பட்டு வருகின்றது. இவ்விடத்தில் ஓர் ஆலயம் கட்டுவதற்குச் சைவத் தொண்டர்கள் முயன்று வருகின்றனர்.

**கன்னியாதீர்த்தம் :** திரிகோணமலையிலிருந்து 5 கல் தொலைவில் கன்னியா என்னும் வெந்நீரூற்றுகள் உண்டு. ஒன்றுக்கொன்று அதிக உஷ்ணமாயிருக்கும் ஆறு ஊற்றுகள் உண்டு. இராவணன் தன் தாயாருக்கு அபரக்கிரியைகள் இவ்விடத்திற் செய்தான் என்பது ஐதிகம்.

**முன்னேஸ்வரம் :** இது வடமேல் மாகாணத்திலுள்ள புராதன சிவாலயம். சிலாபம் புகையிரத ஸ்தானத்திலிருந்து 2 கல் தொலைவிலுள்ளது. 14 ம் நூற்றாண்டுக்கு முன்னரே புகழுடன் விளங்கிய



ஸ்தலம். இதற்குச் சிங்கள அரசர்களும் கண்டியரசர்களும் மானியம் அளித்து ஆதரித்து வந்தனர். போர்த்துக்கீசர் சூறையாடிய கோயில்களுள் இதுவுமொன்று. இக்கோயில் கி. பி. 1875 ம் ஆண்டளவில் புனருத்தாரணம் செய்யப்பெற்றது. கோயிற் கட்டடத்தில் அநேக சிலாசாசனங்கள் உண்டு. நவராத்திரி பூசை, வருடாந்த உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும். யாத்ரீகர் தங்க மடவசதிகள் உண்டு.

**நல்லூர்க் கந்தசுவாமி கோயில் :** இது யாழ்ப்பாணத்திலுள்ள புராதன முருக ஸ்தலம். பண்டைக் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக நல்லூர் விளங்கியது. பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியத்து அரசாளுகை விளங்கிய சிறிசங்கபோதி புவனேகவாகுவினால் இவ்வாலயம் கட்டப்பெற்றதெனக் கூறப்படுகிறது. இதுவும் போர்த்துகீசரால் அழிக்கப்பட்டது. 18 ம் நூற்றாண்டின் இறுதியில் டச்சுக்காரர் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணையர் அவர்களின் முயற்சியினால் மீண்டும் சிறியதோர் ஆலயம் கட்டப்பெற்றது. இரகுநாத மாப்பாண முதலியாரும் இதனைத் திருத்தியமைப்பதில் ஈடுபட்டார். இவருடைய சந்ததியினரே இப்பொழுதும் இக்கோயிலைச் செவ்வனே பரிபாலித்து வருகின்றனர். நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடைபெறும் ஆலயம் எனப் பலராலும் பாராட்டப்படுகின்றது. உற்சவ காலத்தில் பல்லாயிரக்கணக்கானோர் சென்று வழிபடுவர்.

**மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் :** இது யாழ்ப்பாண டிஸ்திறிக்கிலுள்ள புராதன முருகஸ்தலம். திசையுக்கிர சோழன் மகள் மாருதப்பிரவல்லி ஈழ நாட்டுக்கு வந்து தனக்கிருந்த குன்மவலி தீரப்பெற்ற திருவருட்டிறனை ஞாபகமூட்டுதற்காக இவ்வாலயத்தைக் கட்டினாள் என்பது ஐதிகம். போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் இதுவும் தரைமட்டமாக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள்

சபாபதிக் குருக்கள் அவர்களால் இவ்வாலயம் 187 —ல் கட்டப்பெற்றது. இக் கோயிலின் தீர்த்தோற்சவம் 2 கல் தொலேவிலுள்ள கீரிமலேச் சாரலிலுள்ள சமுத்திர தீரத்தில் நடைபெறும். பல்லாயிரக்கணக்கான மக்கள் இதிற் கலந்துகொள்வர்.

**நகுலேஸ்வரம் :** இது யாழ்ப்பாண டிஸ்திறிக்கிலுள்ள புராதன சிவாலயம். தென்னுட்டு முனிவர் ஒருவர், திருத்தம்பலேசுரர் ஆலயத்தருகிலுள்ள தீர்த்தத்தில் ஆடித் தமக்கிருந்த கீரிமுகம் மாறிய காரணத்தால், இவ்விடம் கீரிமலே எனப் பெயர் பெற்றது. இம்முனிவர் கட்டிய ஆலயம் நகுலேஸ்வரம் என வழங்கப்பட்டது. கடற்கரைக்கருகிலுள்ள நன்னீரூற்று பல வியாதிகளேப் போக்குதற்கு உதவியாக இருக்கிறது. ஈழ நாட்டில் கீரிமலேயினும் பார்க்கச் சிறந்த தீர்த்தஸ்தலம் இல்லேயென்றே சொல்லலாம். ஆடியமாவாசையன்று தீர்த்தமாடப் பல கோடி மக்கள் செல்வர். ஸ்ரீ க. தியாகராசக் குருக்கள் தொடங்கிய நன்முயற்சியால் இவ்விடத்தில் ஒரு சிவாலயம் மீண்டும் கட்டப்பெற்றுள்ளது. கீரிமலேயினே ஈழ நாட்டுக் குற்ருலம் எனலாம். யாத்ரீகர் தங்குவதற்குச் சத்திரங்கள் உண்டு.

**மரத்தடி பிள்ளேயார் கோயில் :** இது யாழ்ப்பாண டிஸ்திறிக்கைச் சேர்ந்த மானிப்பாயில் உள்ளது. மருதமரச் சோலேயில் இவ்வாலயம் இருப்பதால், இப்பெயர் பெறலாயிற்று. போர்த்துகீசர் இவ்வாலயத்தையும் இடித்து விட்டனர். கி. பி. 1794 ல் இவ்வாலயம் மீண்டும் அமைக்கப்பெற்றது. சித்திரை வருடப் பிறப்பன்று ரதோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

**செல்லச்சந்நிதி :** யாழ்ப்பாணத்து வடமராட்சிப் பகுதியின் எல்லேயிலுள்ள அருள் விளங்கும் முருகஸ்தலம். ஆலயத்துக்கண்மையில் தொண்டைமாறு ஒடுகிறது. கதிர்காமத்தைப் போலவே பூசை நடைபெறும். அன்னதானம் தினமும் நடைபெறும் புண்ணிய ஸ்தலம். யாத்ரீகர் தங்குவதற்குச் சத்திரங்கள் உண்டு.



**நயினே நாகேஸ்வரி ஆலயம் :** இது நயினு தீவிலுள்ளது. நாகபூஷணி அம்மன் ஆலயம் எனவும் வழங்கப்படும் அருள் சுரக்கும் ஸ்தலம். மோட்டார் லாஞ்சி, வத்தை மூலம் செல்லவேண்டும். விழாக் காலத்தில் பல ஊர்களிலுமிருந்து இந்துக்கள் செல்வர். கோயிற் கிரியைகள் சிறப்பாக நடைபெறும் ஸ்தலம்.

**அமிர்தகழி மாமாங்கப் பிள்ளேயார் கோயில் :** இது கிழக்கு மாகாணத்திலுள்ள புராதன ஸ்தலம். மட்டக்களப்பு பட்டணத்திலிருந்து 2 கல் தொலேவிலுள்ளது. ஹனுமான் தனது வாலில் மூட்டப்பட்ட நெருப்பை இங்குள்ள தீர்த்தத்திலாடி அணேத்தார் என்பது ஐதிகம். இத்தலத்தை இராமபிரான் தரிசித்தார் எனவும் சொல்லப்படுகிறது.

**மண்டூர் கந்தசுவாமி கோயில் :** மட்டக்களப்பிலிருந்து தெற்கே 20 கல் தொலேவிலுள்ள புராதன ஸ்தலம். கதிர்காமத்தைப் போலவே கப்புருளேமார் பூசை செய்யும் முறை இங்கே யுண்டு.

திருக்கோயில், கொக்கட்டிச் சோலே, சிற்ருண்டி, தம்பலகாமம் முதலிய இடங்களிலும் புராதன ஸ்தலங்கள் கிழக்கு மாகாணத்தில் உண்டு.

**விஷ்ணு ஸ்தலங்கள்—**

**வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் :** யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வடமராட்சியிலுள் புராதன விஷ்ணு ஸ்தலம். பருத்தித்துறையிலிருந்து ஏறக்குறைய 3½ கல் தொலேவிலுள்ளது. இதற்கண்மையில் யாழ்ப்பாணத்தரசர்களின் புராதன தலேநகராகிய சிங்கை நகர் இருந்ததாகக் கருதப்படுகிறது. இது பண்டைக்காலத்திற் சிறந்த துறைமுகமாக விளங்கியது. திருவிழாக் காலத்திற் பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் சென்று வழிபடுவர்.

புன்ஞலேயிலுள்ள **வ**ரதராஜப் பெருமாள் கோயிலும் வண்ணர்பண்ணேயிலுள்ள வெங்கடேசப் பெருமாள் கோயிலும் சிறந்த விஷ்ணு ஆலயங்களாகும்.

# பிரதானமான கத்தோலிக்க கோயில்கள்

**மருதமடு :** இது மன்னார்ப்பிரிவில் உள்ளது. மதவாச்சியில் இருந்து தலை மன்னாருக்குப் போகிற புகையிரத வீதியில் உள்ள மடு ரோட்டில் இருந்து 7 கல் தொலைவில் உள்ளது. புகை வண்டி நிலையத்திலிருந்து கோயிலுக்கு பஸ் வண்டிப் போக்கு வரத்து உண்டு. கோயிலுக்கு கிட்ட உள்ள கடையில் உணவுப் பொருட்கள் வாங்க முடியுமென்றாலும் யாத்ரிகர்கள் உணவுக்கு வேண்டிய பொருட்களை தங்களுடன் கொண்டு செல்வது நல்லது. இங்குள்ள கோயில் பரிசுத்த செபமாலை நாயகிக்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. வருடத்தில் பிரதான திருவிழா ஜுலை மாதம் 2 ந் திகதி கொண்டாடப்படும்.

**தலைவில்லு :** இது புத்தளப்பிரிவில் கற்பிட்டிக் குடாநாட்டில் இருக்கிறது. புத்தளத்தில் இருந்து கற்பிட்டிக்குச் செல்லும் வீதியில் உல்ள பாலைக்குடாவில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. இதற்கு கிட்டிய புகைவண்டி நிலையம் சிலாபமாகும். சிலாபத்திலிருந்து புத்தளத்துக்கும் அங்கிருந்து கற்பிட்டிக்கும் பஸ் வண்டிப் போக்கு வரத்து உண்டு. பாலைக்குடாவிலிருந்து கோயிலுக்கு சாதாரணமாக பஸ் முதலிய வாகனப் போக்கு வரத்துகள் கிடையா. வாகனங்கள் செல்லக்கூடிய தெரு உண்டு. திருநாள் அல்லாத காலங்களில் உணவுப் பொருட்கள் பெற்றுக் கொள்ள முடியாது. இங்குள்ள கோயில் அர்ச். அன்னம்மாளுக்கு (சந்தனமாதா) பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. பிரதான திருவிழா ஜுலை மாதம் 26 ந் திகதிக்கு அடுத்து வரும் ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படும்.



**தேவத்தை :** இது கொழும்புப்பிரிவில் ருகமப் புகை வண்டி நிலையத்துக்கு அயலில் உள்ளது. கோயில் புகை வண்டி நிலையத்தில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. கோயிலுக்கு வாகனப் போக்கு வரத்துச் செய்யக் கூடிய தெரு உண்டு. இக்கோயில் லூர்த்து நாயகிக்கு (இலங்கை நாயகிக்கு) பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை நாயகி திருநாள் பெப்ரவரி 4 ந் திகதி கொண்டாடப்படும். கோயிற் பிரதான திருநாள் பெப்ரவரி 11 ந் திகதிக்குப் பின் வரும் ஞாயிற்றுக்கிழமையும், நோயாளர் திருநாள் ஆகஸ்டு மாதத்தில் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமையும் கொண்டாடப்படும்.

**கொழும்பு கொச்சிக்கடை :** இது கொழும்பு நகரத்திலே கொழும்புத் துறைமுகத்தின் ஒருபுறத்தில் இருக்கிறது. புதுமைமிக்க அர்ச். அந்தோனியார் கோயில் உண்டு. திருவிழா ஜூன் 13 ந் திகதி நடந்தேறும்.

**வகக்கோட்டை :** அர்ச். அந்தோனியார் கோயில் ; மாத்தளைப் பிரிவில் உள்ளது. மாத்தளையில் இருந்து 12 கட்டை தூரத்தில் இருக்கிறது. வருடத் திருவிழா ஜூன் 13 ந் திகதியை அடுத்த ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படும்.

ஏனைய பிரதானமான கத்தோலிக்க கோயில்கள் திருநாட் திகதிகள் ஆகியன கத்தோலிக்க பஞ்சாங்கத்தில் உண்டு. அவை அத்துணை பிரதானமானவை யல்லாதபடியால் ஈண்டு தரப்படவில்லை.

# நீங்கள் இலங்கையைத் தரிசிக்க விரும்பினல், அவதானிக்க வேண்டிய குறிப்புகள்

1. இலங்கைக்குள் பிரவேசிப்பவர்கள் அல்லது இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லுபவர்கள் அனைவரும் 1948 ம் ஆண்டின் 20 ம் இலக்க இலங்கைக் குடியேற்ற, வெளியேற்றச் சட்டத்தையும், அதன்படி செய்யப்பட்டுள்ள விதிகளையும் அநுசரித்தல் வேண்டும்.

**பிரவேசம் :**

2. இலங்கைப் பிரஜைகளல்லாத அனைவரும், இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கோ அல்லது இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லுவதற்கோ, உறுதியான தேசீய பாஸ்போர்ட்டுகளை, (அல்லது அவர்களது அரசாங்கங்களால் வழமையாகக் கொடுக்கப்படும் பிரயாண தஸ்தாவேஜுகளை, உதாரணமாக இந்தியா—இலங்கை பாஸ்) வைத்திருத்தல் வேண்டும். இலங்கைக்குள் பிரவேசிக்கும்போது அவர்கள் மேலே கூறப்பட்டவைகளுடன் பின்வருவனவற்றையும் வைத்திருத்தல் வேண்டும் :—

(அ) விஸாக்கள் அல்லது போக்குவரத்து விஸாக்கள் அல்லது நிரந்தர வாச பேர்மிட்டுகள் அல்லது தற்காலிக வாச பேர்மிட்டுகள் பெற்றுக்கொள்வதுடன்,

(ஆ) இலங்கைக் குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர் ஒருவரின் கையொப்பத்தோடுகூடிய புறக்குறிப்பை அவர்களது பாஸ் போர்ட்டுகளிலோ அல்லது பிரயாண தஸ்தாவேஜுகளிலோ பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

**பாஸ் போர்ட்டுகள் :** ஒருவரது பாஸ்போர்ட்டுகளில் அவரது புகைப்படமும் இருத்தல் வேண்டும். இவை அவர் எந்த நாட்டின் பிரஜையாக இருக்கிருரோ அந்த நாட்டின் அரசாங்கத்தால் பாஸ்போர்ட்டுகள் வழங்க அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகஸ்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.



**விஸாக்கள் :** விஸாக்கள் பாஸ்போர்ட்டுகளில் முத்திரை யிடப்படும். இந்தியாவில் விஸாக்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பின்வரும் அதிகாரிகளில் ஒருவருக்கு அனுப்பப்பட வேண்டும் :-

(1) இந்தியாவிலுள்ள இலங்கையின் ஹைகமிஷனர், ஸிலோன் இந்தியா ஹவுஸ், குவீன்ஸ்வே, புதுடில்லி ;

(2) இந்தியாவிலுள்ள இலங்கையின் வர்த்தகக் கமிஷனர், ஸிலோன் ஹவுஸ், ப்ரூஸ் வீதி, பம்பாய் ;

(3) இலங்கை வெளியேற்றக் கமிஷனர், திருச்சினுப்பள்ளி;

(4) குடியேற்ற உதவிக் கட்டுப்பாட்டதிகாரி, மண்டபம் முகாம் ;

(5) குடியேற்ற உதவிக்கட்டுப்பாட்டதிகாரி, தூத்துக்குடி, இவ்வதிகாரி இங்கு குறிப்பிட்ட தினங்களில் மட்டுமே இருப்பார்;

(6) இந்திய அரசாங்கத்தின் விஸா வழங்கப்படும் அதிகாரிகள்

ஒரு விஸா அதனைவழங்கும் அதிகாரியால் அதில் குறிக்கப்பட்டிருக்கும் காலத்துக்கு மட்டும் செல்லுபடியாகும். ஒரு விஸா வழங்கக் கூடிய ஆகக் கூடுதலான கால அளவு ஆறுமாதங்களே. ஒரு விஸாவை வைத்திருப்பவர் அவ்விஸாவில் குறிக்கப்பட்டிருக்கும் கால அளவு முடிவதற்குள் இலங்கையை விட்டுச் சென்றுவிட வேண்டும்.

**போக்குவரத்து விஸாக்கள் :** போக்குவரத்தினிமித்தம் பிறிதொரு நாட்டுக்குப் பிரயாணம் செய்பவர்கள் சாதாரண விஸாக்களை விடுத்து போக்குவரத்து விஸாக்களைப் பெற்றுக் கொள்ளலாம். விஸாக்களை வழங்கும் அதே அதிகாரிகள் போக்குவரத்து விஸாக்களை வழங்குவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிருர்கள். ஒரு போக்குவரத்து விஸா செல்லுபடியாகும் ஆகக்கூடியகால அளவு ஒரு மாதமே; எனவே இதை வைத்திருப்பவர் இதில் குறிக்கப்பட்டுள்ள கால அளவு முடிவதற்குள் இலங்கையை விட்டுச் சென்றுவிட வேண்டும்.

**வாச பேர்மிட்டுகள் :** ஆறுமாத காலத்துக்கு மேல் இலங்கையில் தங்கியிருக்க விரும்புகிறவர்களுக்கு வாச பேர்மிட்டுகள் வழங்கப்படுகின்றன. இலங்கையில் தொடர்ந்தாற் போல் தங்கியிருப்பதற்கு, ஒரு தற்காலிக வாச பேர்மிட் வழங்கப்படுமென்று இலங்கைக் குடியேற்ற அதிகாரி ஒருவரால் அறிவிக்கப்படாவிட்டால் ஆறு மாதகாலத்துக்கு மேல் இலங்கையில் தங்கியிருக்க விரும்பும் எவரும் ஒரு விஸாவுடன் இலங்கையில் பிரவேசிக்கக்கூடாது.

குடியேற்றக் கட்டுப்பாட்டதிகாரி, கொழும்பு, இந்தியாவிலுள்ள இலங்கையின் ஹைகமிஷனர், புதுடில்லி, குடியேற்ற, உதவிகட்டுப்பாட்டதிகாரி, மண்டபம் முகாம் ஆகியவர்களால் தற்காலிக வாச பேர்மிட்டுகள் வழங்கப்படுகின்றன. தற்காலிக வாச பேர்மிட்டுகளைப் பெறுவதற்கு குடியேற்றக் கட்டுப்பாட்டதிகாரியிடம் விண்ணப்பித்துக்கொள்ள விரும்புகிறவர்கள் அவர்களின் பகுதியிலுள்ள விஸா வழங்கும் அதிகாரிகள் ஒருவரின் மூலமாக விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். இவர் அவ்விண்ணப்பத்தை குடியேற்றக்கட்டுப்பாட்டதிகாரியிடம் சமர்ப்பிப்பார். விண்ணப்பதாரி இலங்கை வந்து சேர்ந்ததும் ஒரு தற்காலிக வாச பேர்மிட் கிடைக்கக் கூடியதாக, அவருக்கு ஒரு விஸாவை வழங்குமாறு, குடியேற்றக்கட்டுப்பாட்டதிகாரி, விஸா வழங்கும் உத்தியோகஸ்தர் ஒருவருக்கு அதிகாரமளிப்பார்.

நிரந்தர வாச பேர்மிட்டுகள், குடியேற்றக் கட்டுப்பாட்டதிகாரியால் மட்டுமே வழங்கப்படும்.

பிராயணஞ் செய்ய உத்தேசித்துள்ள தினத்திற்கு பல நாட்களுக்கு முன்பே விஸாக்கள் அல்லது வாச பேர்மிட்டுகளுக்கான விண்ணப்பங்கள் செய்துகொள்ளப்படுவது நன்று. விண்ணப்பம் எந்த அதிகாரியிடம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த அதிகாரி மேற்கொண்டு தகவல்களைக் கோரவோ அல்லது விண்ணப்பதாரியிடம் தஸ்தாவேஜுகளைக் கேட்டுக்கொள்ளவோ அல்லது கொழும்பிலுள்ள குடியேற்றக் கட்டுப்பாட்டதிகாரியிடம் விபரங்களைப் பெறவோ வேண்டியிருக்கலாம். எனவே ஒரு விண்ணப்பம் நேரகாலத்துடன் செய்யப்பட்டால், விண்ணப்பதாரி பிரயாணத்தை ஆரம்பிக்கு முன்பே அவருக்கு பேர்மிட் வழங்கப்படுமா என்பதை அவர் தெரிந்துகொள்ளலாம். ஏனெனில் விண்ணப்பதாரி தமது பிரயாணத்தை ஆரம்பிப்பதற்குமுன் பிரவேச பேர்மிட்டை பெற்றுக்கொள்வது அல்லது பிரவேச பேர்மிட் நிச்சயமாகத் தமக்குக் கிடைக்குமென்று தெரிந்துகொண்டதற்குப்பின் பிரயாணத்தை ஆரம்பிப்பது விரும்பத்தக்கதாகும்.

**புறக்குறிப்பு எழுதல் :** ரயிலில் இலங்கைக்குப் பிரயாணம் செய்யும் அனைவரும் தங்கள் பாஸ்போர்ட்டுகளை தனுஷ்கோடியிலுள்ள இலங்கைக் குடியேற்ற அதிகாரியைக்கொண்டு பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். மேலும் இவர்கள் தங்கள் பாஸ்போர்ட்டுகளில் இந்த அதிகாரிகளிடமிருந்து புறக்குறிப்பு எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும், ஏனெனில் தனுஷ்கோடியில் வைத்து பாஸ்போர்ட்டுகளில் புறக்குறிப்பு எழுதப்படாவிட்டால், அவற்றை வைத்திருப்பவர்களுக்கு தலைமன்னாரில் இறங்க அனுமதி மறுக்கப்படும். தூத்துக்குடியிலிருந்தும் ஆகாய மார்க்கமாகவும் பிரயாணம் செய்பவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது பாஸ்போர்ட்டுகள் இலங்கையில் அவர்கள் பிரவேசிக்கும் நிலையத்திலுள்ள குடியேற்ற அதிகாரியிடம் புறக்குறிப்பு எழுதுவதற்காக ஒப்படைக்கப்பட வேண்டும்.

**வெளியேற்றம் :**

3. இலங்கைக்குள் பிரவேசிக்கும் இலங்கைப் பிரஜைகளல்லாத ஒவ்வொருவரும், இலங்கையில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ள கால எல்லை முடிவதற்குமுன் இலங்கையை விட்டும் வெளியேறிவிட வேண்டும். இவர்கள் ஒவ்வொருவரும் வெளியேறும் நிலையத்திலுள்ள குடியேற்ற அதிகாரியிடம் தமது பாஸ்போர்ட்டை பரிசோதனை செய்யும் பொருட்டு ஒப்படைக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தின்படி இலங்கைப் பிரஜைகள் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு எந்த விதமான பேர்மிட்டுகளும் தேவைப்படாது. இலங்கைக்குள் பிரவேசிப்பவர் உண்மையிலேயே தாம் ஒரு இலங்கைப் பிரஜைதான் என்பதை பிரவேசிக்கும் நிலையத்திலுள்ள குடியேற்ற அதிகாரியிடம் நிரூபிப்பது அவரது கடமையாதலால் அவர் தம்முடன் ஒரு பாஸ்போர்ட்டையும் எடுத்துச் செல்லுதல் உசிதம். அவர் இலங்கையைவிட்டும் வெளியேறுவதற்கு ஒரு பாஸ் போர்ட் அவசியமாகும்.

**தவிர்தல்கள் :**

இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கோ அல்லது இலங்கையைவிட்டு வெளியேறுவதற்கோ தற்சமயம் பாஸ்போர்ட்டுகள் தேவையில்லை. எனினும் அவர்கள் தோட்ட சுப்பிரின்ரெண்டன்களாலோ அல்லது திருச்சிறுப்பள்ளியிலுள்ள இலங்கை வெளியேற்ற கமிஷனராலோ அல்லது மண்டபம் முகாமிலுள்ள அவரது உதவி அதிகாரிகளாலோ வழங்கப்பட்ட அடையாள சர்ட்டிபிக்கேட்டுகளை வைத்திருத்தல் வேண்டும்.

மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் கடற்படை, தரைப்படை, விமானப்படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் ; பிறிதொரு நாட்டின் பொருட்டு அரசாங்க அலுவலாகவோ அல்லது விசேஷ தூதுசம்பந்தமாகவோ இலங்கைக்குச் செல்லுகிறவர்கள் ; இலங்கை அரசாங்கத்தின் நிரந்தர, இளைப்பாற்றுச் சம்பளத்தையுடைய சேவையிலுள்ளவர்கள் ; இலங்கையிலுள்ள ஸ்தானீகர் காரியாலயங்களையோ, தூது கோஷ்டிகளையோ சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ; மேலே கூறப்பட்டவர்களின் குடும்பங்கள் ஆகியோர் செல்லுபடியாகக் கூடிய பாஸ்போர்ட்டுகளை வைத்திருப்பார்களானல் அவர்கள் பிரவேச பேர்மிட் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

**கப்பல் சிப்பந்திகள் :** இலங்கை வட்டாரத்தைச் சேர்ந்த கடல்களிலுள்ள கப்பல்களின் சிப்பந்திகள் சம்பந்தமாக கப்பல் கம்பெனிகளுடன் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**உண்மையான உல்லாசப்பிரயாணிகள்** பிரிட்டனும் குடியேற்ற நாடுகளும், இந்தியா, பாகிஸ்தான், கனடா, அயர் ஆகிய தேசங்களின் பிரஜைகள் சம்பந்தப்பட்டமட்டில் அவர்கள் வந்திறங்கும் நிலையத்திலுள்ள குடியேற்ற அதிகாரியிடம் தாங்கள் உண்மையாகவே உல்லாசப் பிரயாணிகள்தான் என்று நிரூபிப்பார்களாயின், ஆறுமாத காலத்திற்கு அதிகப்படாமல் இலங்கையிற் சுற்றுப்பிரயாணம் செய்ய பிரவேச பேர்மிட் இல்லாமல் அனுமதிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட ஒரு உல்லாசப் பிரயாணி பணம் டிப்பாஸிட் செய்ய வேண்டுமென்று குடியேற்ற அதிகாரி கருதுவாரானல் அவர் 500 ரூபா டிப்பாஸிட் செய்யக்கூடிய நிலைமையில் இருக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள பிரதான நகரங்களிலெல்லாம் விஸாக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதால் இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்திருப்பவர்கள் பிரயாணத்தை ஆரம்பிப்பதற்கு முன் பிரவேச பேர்மிட்டுகளை பெற்றுக்கொள்ளுமாறு யோசனை கூறப்படுகிறார்கள்.

இந்த சட்டங்கள் சம்பந்தமாக ஏதேனும் சந்தேகமோ அல்லது கஷ்டமோ ஏற்படுமாயின் இலங்கைக்கு விஜயம்செய்ய உத்தேசித்திருப்பவர்களுக்கு கொழும்பு, குடியேற்றப் பகுதி தேவையான யோசனைகளைச் சந்தோஷத்துடன் கூறும்.

